விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 005 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 09 புதன்கிழமை (24.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பேரிடர் மீட்புக்கு இந்தியா உதவி

### அநுரவிடம் ஜெய்சங்கர் நேரில் தெரிவிப்பு

(கொழும்பு)

பேரிடர் நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க முதல் உதவித் திட்டமாக 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் (450 மில்லியன் அமெரிக்க டொலர்) வழங்கப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் 15ஆம் பக்கம் பார்க்க



## கிளிநொச்சி ஏ35 வீதிப் பாலம் மக்கள் பாவனைக்குத் திறப்பு

### காணொளி மூலம் பாலத்தை திறந்தார் எஸ்.ஜெய்சங்கர்



04ஆம் பக்கம் பார்க்க

### மாகாண சபைத் தேர்தலை நடத்த

# இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### ஜெய்சங்கரிடம் தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

மாகாண சபைத் தேர்தலை நடத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் தமிழ்த் தலைவர்கள் ஒரே குரலில் வலியுறுத்தியுள்ளனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

### பளை இத்தாவிலில்

## ரயில் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

(பளை)

பளை இத்தாவில் பகுதியில் புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க



### உணவு ஒவ்வாமை

## 12 வயதுச் சிறுமி முல்லையில் மரணம்

(முல்லைத்தீவு)

உணவு ஒவ்வாமை காரணமாக முல்லைத்தீவு சிலாவத்தையில் 12 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந் 15ஆம் பக்கம் பார்க்க



## வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தவர்

### திடீரென மயங்கி விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில்தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

உடுவில் ஆலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தேவதாஸ் 15ஆம் பக்கம் பார்க்க

## சமஷ்டித் தீர்வை வலியுறுத்தும் முன்னணியை தனிமைப்படுத்த ஏனைய கட்சிகள் முயற்சி

### ஜெய்சங்கரிடம் சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார்

(கொழும்பு)

சமஷ்டித் தீர்வை வலியுறுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தனிமைப்படுத்த ஏனைய தமிழ்க் கட்சிகள் முயற்சி செய்து வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் சுட்டிக் காட்டியதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் "இந்திய இல்லத்தில்" நேற்று மாலை சந்தித்துப் பேசினர்.

இந்திய வெளிவிவகார 04ஆம் பக்கம் பார்க்க

## சண்டிலிப்பாய் அபிவிருத்தி கூட்டத்தில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

பொருத்தமான இடத்தில் ஆசனம் ஒதுக்கப்படாததால் சண்டிலிப்பாய் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்று குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் ஸ்ரீபவானந்தராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

தம்மைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்க 15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டிலிருந்து புறப்பட்டார் ஜெய்சங்கர்


(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்றிரவு தாயகம் திரும்பினார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று முன்தினம் (22) 15ஆம் பக்கம் பார்க்க

### யாழில் சுற்றிவளைப்பு

## 17 வயதுச் சிறுவன் உட்பட 10 பேர் போதையுடன் கைது



15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா ... க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த (04.01.2025) அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

## திருமதி ர.கோகிலா (யகி)

திதி : பஞ்சமி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையும் இன்று (24.12.2025) புதன் கிழமை எமது இல்லத்தில் நடை பெறவுள்ளது.



முகம் பார்த்து ஆண்டொன்று ஆனதுவோ
மூச்சு இழந்தாற் போல் தவிக்கின்றோம் – யகி
இறப்பு பிறப்புடன் இணைந்தே இருப்பது
பிறப்பின் மறுபக்கம் இறப்பு
உறவுகள் துண்டிக்கப்படுவதால் இதை ஏற்க மறுக்கின்றோம்
யாவும் முடிந்ததுவோ எமக்கு யாருமற்றுப் போனதுவோ
ஆண்டுகள் பல ஆனாலும் ஞாபகங்கள் மறையாது...


முகமாலை,
எழுதுமட்டுவாள்.

என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர்

(6318)

# ஆழ்ந்த அனுதாபங்கள்

தோற்றம்
08 . 05 . 1959



மறைவு
20 . 12 . 2025

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு - 13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

## திரு. வைத்திலிங்கம் ஜெயரஞ்சித்

(SVM (Pvt) Ltd இல் முகாமையாளராக 30 வருடகாலமாக சேவை புரிந்து இளைப்பாறியவர்) இறைவனடி சேர்ந்தார்.

எமது நிறுவனத்தின்
வளர்ச்சிக்கும் மரியாதைக்கும்
உழைப்பையும் நேர்மையையும் அர்ப்பணித்தவர்

சக ஊழியர்களுடன் அன்பாகப் பழகி
நட்பையும் நம்பிக்கையையும்
வாழ்வில் நடைமுறைப்படுத்தியவர்

ஒரு பணியாளரை அல்ல
ஒரு குடும்ப உறுப்பினரை
இன்று நாம் இழந்துள்ளோம்

உங்கள் உழைப்பு எமது நினைவுகளில்
என்றும் வாழும் உங்கள் ஆத்மா
அமைதியில் இளைப்பாறட்டும்

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**S.V.M. நிறுவனத்தினர் மற்றும் பணியாளர்கள்**

S.V.M (PVT) Ltd
No.122, Dam St
Colombo - 12

S.V.முருகேசு,
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-4654)



# எனது 35 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

## நாளை (25.12.2025)

## பிள்ளையார் பெருங்கதை விரத முடிவு

சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில் வழமை போன்று கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் விநாயகர் விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதை யாவரும் அறிவீர்கள். விநாயகர் விரத முடிவு நாளை 25ஆம் திகதியாகும். அன்றைய தினம் எம் பெருமானுக்கு காலை 10.30 மணியளவில் விசேட அபிஷேகம் ஆரம்பமாகி நண்பகல் 12.00 மணியளவில் பூஜைகள் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பிள்ளையார் கதை படிப்பு ஆரம்பமாகி பி.ப 2.30 மணியளவில் சுவாமி வீதி உலா நடைபெறும்.

அவ்வேளை எம் பெருமானிடம் இறையருள் வேண்டி அண்மையில் நாட்டில் ஏற்பட்ட டித்வா புயல் இயற்கைப் பேரிடரில் சிக்குண்டு மரணித்தவர்களின் ஆத்ம சாந்திக்கான விஷேட பூஜை வழிபாடுகள், பிரார்த்தனைகள், பஜனைப் பாடல்கள் யாவும் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**குறிப்பு:** ஈசுர விநாயகர் தேவஸ்தானத்திலே சுழிபுரம் மத்தி திருவாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சபா குகதாசன் அவர்களால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த 21.12.2025 அன்று நிவாரணப் பொதி வழங்கப்பட்டது.

### அன்பான உள்ளங்களே!

டித்வா புயலின் கோரத்தாண்டவம் பற்றிய பலரின் கருத்துக்கள்:

1. இது ஒரு மர்மப் புயல் என்கிறார்கள்.
2. வரலாற்றில் இப்படியான ஒரு புயலைக் கண்டதில்லை.
3. காடுகள் அதிகமாக அழிக்கப்பட்டதால் இது ஒரு இயற்கையின் தண்டனை.
4. இயற்கை அனர்த்தத்தை முன்கூட்டியே அறிந்தும் அரசு மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்று எதிரணியினர் அரசு மீது குற்றம் சுமத்துகின்றனர்.

### எனது அன்பு உள்ளங்களே!

யார் என்ன சொன்னாலும் எனது ஆன்மீகக் கண்ணோட்டம் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் தினம். இம்மாவீரர் தினம் முடிந்த கையுடன் மாவீரரின் எழுச்சியே 28ஆம் திகதி டித்வா புயலாக உருமாறி வேகம் கொண்டெழுந்து கோரத்தாண்டவம் ஆடியது மட்டுமல்ல நாட்டையே தலைகீழாகப் புரட்டிப் போட்டது. இவ்வுலகில் காரணமில்லாமல் காரியம் எதுவும் நடப்பதில்லை. மாவீரர் தினத்தில் டித்வா புயல் ஏற்படக் காரணம் என்ன? காரணத்தை எனது ஆன்மீகப் போராட்டத்தின் மூலம் கண்டுபிடிப்போம். பொறுமையாக இருங்கள்.

**சிந்தனை செய் மனமே தீரா தீவினை அகன்றிடுமே!**

**நினையுங்கள்! சிந்தியுங்கள்!! தெளியுங்கள்!!! உணருங்கள்!!!!**

**என் அன்பு உள்ளங்களுக்கு எனது ஆன்மீகக் கண்ணோட்டத்தில் விரைவாக விளக்கம் தருவேன்**

சோழியபுரம், சுழிபுரம்.
23.12.2025

சோழியூரான் பிறைசூடிக்குரு
(ஆன்மீகஜோதியும் சந்ததிப் பூசகரும் பரம்பரைப் பரிபாலகரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கான புதிய வரைவு இன்னும் இறுதி செய்யப்படவில்லை



(கொழும்பு) ..........................

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கான புதிய வரைவு இன்னும் இறுதி செய்யப்படவில்லை என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரேன்சி அர்சகுலரத்ன தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரைவு, அமைச்சரவை அல்லது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று திருத்தப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

இந்த வரைவு தற்போது நீதி அமைச்சின் இணையத் தளத்தில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் ஆர்வலர்கள் இது தொடர்பான தங்களது பரிந்துரைகளை 2026 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் எனவும், பெறப்படும் கருத்துக்கள் ஆய்வுக்காக மீண்டும் அதே தயாரிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் உணர்வுபூர்வமான மற்றும் முறையான சட்டத்தை உருவாக்குவதற்கு தனிநபர்கள், அமைப்புகள் மற்றும் குழுக்களின் பங்களிப்பு அவசியம் என்பதால், அனைவரையும் தமது கருத்துக்களை வழங்குமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (நி)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 22 இலட்சத்து 58 ஆயிரத்து 202 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக நாட்டில் ஏற்பட்ட பாரிய அனர்த்தத்தின் பின்னரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து இலங்கைக்கு வருகை தருவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 510,133 ஆகும்.

அத்துடன், டிசம்பர் மாதத்தின் முதல் 21 நாட்களில் 154,609 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# கொழும்பு மாநகர சபையின் பாதீடு தோல்வி

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் வசமுள்ள கொழும்பு மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு 3 மேலதிக வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

பாதீட்டுக்கு ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

2025 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து, கொழும்பு மாநகர சபையில் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டது.

இத்தேர்தலில் 36.92 சதவீத வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி 48 ஆசனங்களை கைப்பற்றி முன்னிலை பெற்றது.

எனினும், 117 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் எத்தரப்பும் தனித்து ஆட்சியமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மையை பெறாத நிலையில், தேசிய மக்கள் சக்தி ஏனைய சில தரப்புகளின் ஆதரவுடன் சபையின் ஆட்சியைப் பொறுப்பேற்றது.

இந்த நிலையில், இலங்கையின் உள்ளூராட்சிச் சட்டத்தின்படி, பாராளுமன்றத்தைப் போலன்றி, மாநகர சபையொன்றின் பாதீடு தோற்கடிக்கப்படுவதால் அந்தச் சபை கலைக்கப்படவோ அல்லது அதன் நிர்வாகம் உடனடியாகப் பதவி விலகவோ வேண்டிய அவசியமில்லை.

இதனால் தேசிய மக்கள் சக்தி தொடர்ந்தும் சபையை நிர்வகிக்கும் தகுதியைக் கொண்டுள்ளதுடன், உடனடி நிர்வாக பாதிப்புகள் ஏதும் ஏற்படாது. (நி)

# அரசினை பாதுகாக்கும் சட்டமூலம் திரும்பப் பெறப்படவேண்டும்

## சமூக ஊடகப் பிரகடனத்திற்கான கூட்டமைப்பு விமர்சனம்

(கொழும்பு)

முன்மொழியப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டின் "அரசினை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டமூலம்", மக்களின் கருத்துச் சுதந்திரம், அந்தரங்க உரிமை மற்றும் ஜனநாயகப் பொறுப்புக்கூறலுக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையும் என சமூக ஊடகப் பிரகடனத்திற்கான கூட்டமைப்பு கடும் கவலை வெளியிட்டுள்ளது.


தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றீடாகக் கொண்டுவரப்படும் இந்தச் சட்டமூலம் குறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக விமர்சிக்கப்பட்டு வரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அதே அம்சங்களான, குற்றச்சாட்டுகள் இன்றி நீண்டகாலம் தடுத்து வைத்தல் மற்றும் நீதித்துறை மேற்பார்வை குறைக்கப்பட்ட இராணுவ அதிகாரங்கள் போன்றவை இதிலும் உள்வாங்கப்பட்டுள்ளன.

அத்துடன், சட்டமூலத்தின் 78 ஆவது பிரிவின் கீழ் "இரகசியத் தகவல்" என்பது மிகவும் பரந்த அளவில் வரையறுக்கப்பட்டுள்ளது. இது சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் இராணுவ நடமாட்டங்களை ஆவணப்படுத்துவதைக்கூட குற்றச் செயலாக்கக் கூடும்.

அதன் 15 ஆவது பிரிவின்படி, பயங்கரவாதம் தொடர்பான தகவல்களைப் பகிராத ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் மருத்துவர்கள் சட்டச் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். இணையத் தொடர்புகளைக் கண்காணித்தல் மற்றும் குறியாக்கங்களை உடைப்பதற்கான அதிகாரம், தனிப்பட்ட அந்தரங்க உரிமையை முழுமையாகப் பாதிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலமானது குடிமக்களைப் பாதுகாப்பதை விட, அரச அதிகாரத்தைப் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ள அந்த கூட்டமைப்பு, அரசாங்கம் இந்தச் சட்டமூலத்தை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் எனவும், சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கு அமைவாகப் புதிய சட்டங்களை உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. (நி)



## ஒத்திவைக்கப்பட்ட உயர்தர பரீட்சை;

# தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட அறிவிப்பு




(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் ஒத்திவைக்கப்பட்ட பாடங்களுக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் முகவரிகளில், அனர்த்தங்கள் காரணமாக மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால், உடனடியாக அதிகாரிகளுக்கு அறியப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 011 278 4537 அல்லது 011 278 8616 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக தகவல்களை அறியப்படுத்த முடியும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களினால் வசிப்பிடத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, முன்னர் ஒதுக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையங்களுக்கு செல்ல முடியாத பரீட்சார்த்திகள், முன்கூட்டியே பரீட்சைகள் திணைக்களத்திற்கோ அல்லது பாடசாலை அதிபருக்கோ அறியப்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறான பரீட்சார்த்திகளுக்கு மாற்றுப் பரீட்சை மத்திய நிலையங்கள் ஒழுங்கு செய்யப்படவுள்ளன.

அத்துடன், பேரிடர் காரணமாக விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் அல்லது தேசிய அடையாள அட்டைகள் சேதமடைந்தாலோ அல்லது அழிக்கப்பட்டிருந்தாலோ, அந்த விடயங்கள் தொடர்பிலும் உடனடியாக அறிவித்துத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை வீழ்த்திய
## பாகிஸ்தான் வீரர்களுக்கு பரிசு மழை




12 ஆவது இளையோர் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி (19 வயதுக் குட்பட்டோர்) டுபாயில் நடந்தது.

அதன் இறுதி ஆட்டத்தில் பாகிஸ் தான் அணி 191 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் இந்தியாவை தோற்கடித்து 2 ஆவது முறையாக மகுடம் சூடியது.

172 ஓட்டங்கள் குவித்த அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் சமீர் மின்ஹாஸ் ஆட்ட நாயகன் மற் றும் தொடர் நாயகன் விருதை பெற்றார்.

இளையோர் போட் டியில் இந்திய அணியை வீழ்த்தியதும் அந்த வெற் றியை திருவிழா போல் அவர்கள் கொண்டாடினர்.

நேற்று முன்தினம் அதிகாலை தாயகம் திரும்பிய அந்த அணி வீரர்க ளுக்கு சீனியர் வீரர்களுக்கு கொடுப்பது போன்று தடபுடலான வரவேற்பு அளிக் கப்பட்டது.


அந்த நேரத்திலும் இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் ஆயிரக் கணக் கான ரசிகர்கள் திரண்டு நின்று வாழ்த்து கோஷம் எழுப்பினர்.

பாகிஸ்தான் இளம் வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரிப் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.1 கோடி (இந்திய மதிப்பில் ரூ.32 லட்சம்) வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அத்துடன் அவர்களை தனது இல் லத்திற்கு நேரில் அழைத்து விருந் தளிக்க உள்ளார்.

முன்னதாக அவர்களுக்கு கோப்பை மற்றும் பதக்கங்களை வழங்கி பாராட் டிய பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவரும், உள்துறை அமைச்சரு மான மொசின் நவ்வி தலா ரூ.16 இலட் சம் பரிசு வழங்குவதாக அறிவித் தார். (நி)


# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 2000 . 10 . 13

உதிர்வு 2017 . 12 . 24

நன்றி மறவோம் என்றென்றும்

## அமரர் தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்)

2017.12.24 அன்று அகால மரணமடைந்த தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்) அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இவரின் பிரிவுத்துயர் கேட்டு (24.12.2017) சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகைதந்த பொதுமக்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், வைத்திய அதி காரிகள், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களது பண்டிகைக்கால கொண்டாட்டங்களைத் தவிர்த்து எம் செல்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மக்கள், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிலையத்தினர், பொதுமக்கள், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியாளர்கள், முல்லை மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், புதுக்குடியிருப்பு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பதாதைகள் அச்சிட்டவர்கள்,வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்தி தெரிவித்தவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், உணவு தந்து உதவிய உறவுகள், நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் அனைத்தையும் தாங்களே செவ்வனே செய்து முடித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

077 276 8570, 076 971 1453 (C-4655)

6ஆம் வட்டாரம், சிவநகர், புதுக்குடியிருப்பு.

தனிஸ்ரன் பல்பொருள் வாணிபம், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.


## இலங்கை ...

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் நேற்று கொழும்பில் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்துக் கலந் துரையாடினார்.

இச்சந்திப்பில், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், மாகாண சபைத்தேர்தல்களை இனியும்காலத்தை இழுத்தடிக்காமல் விரைந்து நடத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்தும்படி ஒரே குரலில் அவரிடம் வலியுறுத்தினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச்செய லாளர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரன், இரா.சாணக்கியன் மற்றும் ரெலோ வின் தலைவர் பாராளுமன்ற உறுப்பி னர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த் தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகிய எண் மரே நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தனர்.

சந்திப்பில் பங்குபற்றிய எல்லோ ருமே கருத்துக்களை வெளியிட்டனர். பெரும்பாலும் அனைவரும் மாகாண சபைத் தேர்தலை இனியும் இழுத் தடிக்காமல் விரைந்து நடத்தும்படி வலியுறுத்தினர்.

மாகாண சபைத் தேர்தல் தொடர் பாக அரசின் நிலைப்பாடு, கருத்து வெளிப்பாடுகள், நாட்டிலுள்ள நிலைமை ஆகியவை குறித்து தமிழ்க் கட்சிக ளின் தலைவர்களின் கருத் துக்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் உன் னிப்பாகச் செவிமடுத்திருந்தார். (ம-7)

## சமஷ்டித் ...

அமைச்சருடனான இந்தச் சந்திப்புக் குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே பாரா ளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 13ஆம் திருத்தம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் கடந்த 38 வருடங்களாக அதனை நடைமுறைப்படுத்துமாறு இந்திய இலங்கையிடம் கேட்டுக் கொண்டே இருக்கின்றது.

நாமும் அதனைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டுமே தவிர, அதற்கு அப்பால் எதுவும் நடக்கப் போவதில்லை என்ற உண்மையை தாம் அமைச்சர் ஜெய்சங்கரிடம் மிகத் தெளிவாக வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒற்றையாட்சியை நிராகரிக்க வேண்டும் என்ற மக்கள் ஆணை யைப் பெற்றுக்கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் அந்த ஆணைக்கு மாறாகச் செயற்படுவது தமிழ் இனத்தின் துரதிஷ்டம் என அவர் குறிப்பிட்டார்.

சமஷ்டித் தீர்வை வலியுறுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் குரலைத் தனிமைப்படுத்தும் நோக்கில் ஏனைய கட்சிகள் செயற்பட்டதாகவும் ஒற்றையாட்சிக்குள் முடங்கியுள்ள எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களுக்குப் பொருத்தமற்றது என்பதை இந்தக் கட்சிகள் வலியுறுத்தத் தவறியுள்ள தாகவும் அவர் சாடினார்.

இவ்வாறான போக்குகள் தமிழ் மக்களின் அரசியல் இலக்குகளை அடைவதற்குப் பெரும் தடையாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டி னார்.

இதனிடையே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஏதோ ஒரு ஆவ ணத்தை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் வழங்கியதாகவும், ஆனால் அந்த ஆவணம் ஜெய்சங்கரி டம் நேரடியாக வழங்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அந்த ஆவணத்தில் என்ன விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது குறித்து இதுவரை இரகசியம் பேணப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-7)

## கிளிநொச்சி ...

கிளிநொச்சி ஏ35 வீதியுடனான பாலம் மறுசீரமைக்கப்பட்டு மீண்டும் நேற்று மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் காணொளி மூலம் குறித்த பாலத்தை திறந்து வைத் தார்.

டித்வா பேரிடரால் கடந்த 28ஆம் திகதி ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத் தின் ஏ 35 பிரதான வீதியில் 11 ஆம் மைல்கல் பகுதியில் அமைந்துள்ள பிரதான பாலம் ஆனது பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இதன் காரணமாக கிளிநொச்சி முல்லைதீவு மாவட்டங்களுக்கான போக்குவரத்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் காரணமாக கிளிநொச்சி முல்லைத்தீவுக்கான போக்குவரத்து வட்டக்கச்சி ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

குறித்த பாலத்தின் புனரமைப்பு பணிகள் துரித கதியில் நிறைவடைந் ததையடுத்து 25 நாட்களின் பின்னர் மீண்டும் இப்பாலத்தின் ஊடான போக்குவரத்து நேற்று மீண்டும் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலத்தின் புனரமைப்புப் பணிகளை இந் திய இராணுவத் தினர் மற்றும் இலங்கை இரா ணுவத்தினர் வீதி அபிவிருத்தி அதி கார சபையினர் இணைந்து துரித கதியில் முன்னெ டுத்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (ம-7,316)


# நாகபூஷணி திருமண சேவை

## 50% கட்டணக் கழிவு

(24.12.2025 முதல் 05.01.2026 வரை)

அரச, தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு.

மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(துர்க்கா மணி மண்டபத்திற்கு 3 வீடுகள் தள்ளிய லேனில்)

021 222 9306, 077 138 7596, 071 999 9306

(C-4657)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய வெளிவிவகார அமைச்சர்-பிரதமர் ஹரிணி சந்திப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியின் விசேட தூதுவராக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், நேற்று அலரி மாளிகையில் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரியவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

"டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து, இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளை ஆரம்பித்துள்ள இத்தருணத்தில், நாட்டின் உயர்மட்டத் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாகவே இந்தச் சந்திப்பு அமைந்தது. (நி)



## சாவகச்சேரி நகரசபை பாதீடு
### 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதன்போது வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் மூவர் வாக்களித்திருந்தனர்.

ஏனைய அனைவரும் ஆதரவாக வாக்களித்த நிலையில், 11 மேலதிக வாக்குகளால் பாதீடு நிறைவேற்றப்பட்டது.

நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தலைமையில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்திற்கான அங்கீகாரம் வழங்கும் நிகழ்வில் தமிழரசு கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஆகியோர் ஆதரவளித்த நிலையிலேயே வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)



இலங்கைக்கான உலக சுகாதார நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி டாக்டர் ராஜேஷ் சம்பாஜிராவ் பாண்டவ் யாழ் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட வேளை...

**பண்டிகைக்கால உணவுப் பாதுகாப்பு**

## 375 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் பொது மக்களுக்குப் பாதுகாப்பற்ற மற்றும் தரம் குறைந்த உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் நோக்கில், நாடளாவிய ரீதியில் 1,190 தொடர் சோதனைகளைச் சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

அண்மைய சோதனையின் போது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகளை விற்பனை செய்த சுமார் 375 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்துள்ளார்.

உணவுப் பாதுகாப்புத் தரத்தைப் பேணுவதை உறுதி செய்வதற்காக, நாடு முழுவதும் சுமார் 1,800 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தரமற்ற உணவுகள் அல்லது சுகாதாரமற்ற முறையில் உணவு விற்பனை செய்யப்படும் இடங்கள் குறித்து பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான முறைப்பாடுகளை சுகாதார அமைச்சின் 1926 என்ற துரித இலக்கத்திற்கு அல்லது அந்தந்தப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## மதுபோதையில் சாரத்தியம்; கண்டறிய கருவிகள் இறக்குமதி


(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை அடையாளம் காண பயன்படுத்தப்படும் சாதனங்கள் தற்போது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று முதல் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அல்கோலைசர் சாதனங்கள் அனுப்பப்படும் என்று போக்குவரத்து தலைமையகப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கிட்டத்தட்ட 80 000 அல்கோலைசர் சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கொள்முதல் செயல்முறைக்குப் பின்னர் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 03.09.1945

இறைவன் அடியில் 22.12.2025

## இராசா பரமசிவம் (சங்கர் ஐயா)

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி பரவிப்பாஞ்சானை வசிப்பிடமாகவும் எல்லோராலும் சங்கர் ஐயா என அன்புடன் அழைக்கப்படும் இராசா பரமசிவம் அவர்கள் 22.12.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா-இராசம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா இராசம்மாவின் அன்பு மருமகனும், அருந்தவமலரின் கணவரும், காலஞ்சென்ற மனோரஞ்சிதம் அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் குணசீலன் அவர்களின் அன்பு மைத்துனரும், கிரிதரன், மங்களகௌரி, சீத்தானந்த், மங்களரூபி(ஜேர்மன்), காலஞ்சென்ற மங்களதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவிந்திரா, ஸ்ரீகாந்தன், விஜிதா, பாலசுதன் (ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும், ஜதுஷன் (Medical University Bellarus), ஜதுர்சி (University of Colombo), திபிஷனா (கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி), பகிசனா (கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி), சாருகா, நித்தகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சானுகன் (யாழ்.இந்துக் கல்லூரி), துஷாந்த், நிஷாந்த், றக்ஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பாட்டனாரும், தேன்மொழி (டென்மார்க்), மனோகர் (நோர்வே), வசீகர் (சுன்னாகம்), பூங்கொடி (சுன்னாகம்), விஷாகர் (லண்டன்), மாங்கனி (சுவிஸ்), மலர்விழி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாய் மாமனும், சூட்டி என்று அழைக்கப்படும் இராஜேந்திரகுமார், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.12.2025 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இல.33/6, பரவிப்பாஞ்சானை,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

(1834)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் கலைச்சமூகத்தின் ஏற்பாட்டில் கவித்துவக் கலைஞர் அருள்பரன் வாகீஸ்பரனை கௌரவிக்கும் விழா கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதன்போது இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்னால் வைத்து வாகீஸ்பரனுக்கு வேல் வழங்கப்பட்டது.

குறித்த கௌரவிப்பு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:சிவசாந்தன்)

### பரு.துறையில் டெங்கு பரவும் சூழல்

## 24 காணி உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல்

(கரணவாய்)

பருத்தித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்றிட்டமானது நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

பருத்தித்துறை நகர சபையினர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், பிரதேச செயலகத்தினர், மற்றும் பருத்தித்துறை பொலிஸாரும் இணைந்து வீடுகள் தோறும் களத்தரிசிப்பு மேற்கொண்டனர்.

இதன் போது 461 காணிகள் பரிசோதிக்கப்பட்டதுடன் 146 இடங்கள் நுளம்பு பரவக் கூடிய சூழலாக இனங் காணப்பட்டது. அத்துடன் 24 ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் நுளம்புக் குடம்பிகளுடன் சுற்றாடலினைப் பேணிய 10 குடியிருப்பாளர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8-60)

### தையிட்டியில் பொலிஸாரின் அடாவடித்தனம்

## சித்திரவதை தொடர்பில் தூதரகங்களுக்கு முறையிட்டுள்ளோம்

### தவிசாளர் நிரோஷ்



(யாழ்ப்பாணம்)

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக அமைதி வழியில் ஜனநாயக ரீதியாக போராடிய எம்மை பொலிஸார் கடுமையாகச் சித்திரவதை செய்துள்ளனர். சட்டம், ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் இம் மிலேச்சத்தனமான பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான அணுகுமுறைகளுக்காக அழுத்தத்தினைப் பிரயோகிக்குமாறு வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் ரீதியிலான பொறிமுறைகளுக்கும் அரசுக்கு உதவி அளிக்கும் நிறுவனங்களுக்கும் முறையிட்டுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தையிட்டியில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஏகமனதாக முன்னெடுத்த சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் பகிரங்க அகிம்சை வழி போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அப் போராட்டத்தில் நீதிமன்றின் உத்தரவுகளை மதித்தே நாம் போராடினோம். அவ்வாறாகப் போராடிய போது எம்மீது பொலிஸார் பிரயோகித்த சித்திரவதையினையும் மனித குல நாகரீகத்திற்கு ஏற்புடையதல்லாத நடவடிக்கைகள் தொடர்பாகவும் இலங்கையில் உள்ள பிரதான நாடுகளின் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான நிறுவனங்கள், சித்திரவதைக்கு எதிரான சர்வதேச தாபனங்கள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மனித உரிமைகள் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தாபனங்களுக்கும் இவ் விடயம் பற்றி போதிய ஆதாரங்களுடன்முறையிட்டுள்ளோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)



தென்மராட்சி கிழக்கு, கச்சாய் கிராமத்தின் மத்தியிலுள்ள நீர்த் தேக்கத்திலிருந்து நீர்த்தேக்கத்தைச் சுற்றி பதினைந்து (15) ஏக்கர் ஏற்று நீர்த்திட்ட, 2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுடன் நெற்செய்கையின் அமோக விளைச்சலை, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் நெற்செய்கையுடன் இருக்கும் வயல்நிலத்தின் மத்தியில் நின்று அவதானிப்பதைப் படத்தில் காணலாம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்தியநிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | வவுனியா | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 900 | 900 | 1000-1200 | 800 | 650 | 650-800 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | -- | 240 | -- | 185 |
| பச்சைமிளகாய் | 1600 | 1200 | 800 | 1100-1300 | 1200 | 900 | -- |
| தக்காளி | 600 | 750 | 600 | 700 | 800 | 650 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 130-160 | 150 | 90 | 180 |
| கோவா | 350 | 300 | 400 | 300 | 400 | 270 | 300 |
| கரட் | 400 | 350 | 400 | 350 | 400 | 260 | 300 |
| பூசணி | 140 | 140 | 150 | 120 | 250 | 80 | 100 |
| புடோல் | 350 | 480 | 400 | 500 | 400 | 450 | 500 |
| வாழைக்காய் | 100 | 80 | 150 | 70-120 | 200 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-300 | 300 | 200-350 | 400 | 350 | -- |
| பெரிய வெங்காயம் | 220 | 240 | 200 | -- | 250 | 230 | 200 |
| பாகற்காய் | 1800 | 1400 | 1500 | 1400 | 2000 | 900 | 1200 |
| வெண்டக்காய் | 400 | 300 | 400 | 250-300 | 600 | 300 | 300 |
| கருணைக்கிழங்கு | 350 | 260 | 300 | 200 | 400 | 300 | -- |
| பயற்றங்காய் | 800 | 1000 | 1000 | 1000-1200 | 1000 | 700 | 800 |
| லீக்ஸ் | 400 | 350 | 400 | 350 | 400 | 260 | 300 |
| பீற்றூட் | 400 | 600 | 600 | 500 | 800 | 320 | 600 |
| கறிமிளகாய் | 1200 | 950 | 1000 | 1000 | 1200 | 900 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 700 | 850 | 1000 | 800 | 1000 | -- | 700 |
| கத்தரிதம்புள்ள | 800 | 700 | 600 | -- | 750 | -- | -- |
| கீரை - 1 பிடி | 180 | 200 | 200 | 180 | 250 | 150 | -- |
| தேசிக்காய் | 600 | 800 | 400 | 300-700 | 400 | 220 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 150 | 70-170 | 120-180 | 120 | -- |
| இராசவள்ளி | 800 | 800 | 500 | 480 | 600 | 475 | -- |
| வெங்காயப்பூ | 600 | 1100 | 600 | 800 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 300 | 250 | 400 | 120 | 400 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 140 | 200 | -- | 80 | 50 | -- |
| வல்லாரை | 80 | 70 | 100 | -- | 150 | 100 | -- |
| ஈரப்பலா | 100 | 150 | 150 | 50-80 | 200 | 50 | -- |

## திருவாதவூரர் புராணம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்ததில் இருந்து விடுவிப்பதற்கும் நாட்டில் அமைதி நிலவுவதற்கும் யாழ்.குடாநாட்டில் உள்ள 51 ஆலயங்களில் சைவசமயப் பேரவை திருவாதவூரர் புராணமுற்றோதலை செய்து வருகின்றனர்.

அந்தவகையில் நாளையதினம் கொழும்புத்துறை தவத்திரு யோகர் சுவாமி ஆச்சிரமத்திலும் நாளை மறுதினம் கா்ரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்திலும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 27 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண குமாரசாமி வீதியில் உள்ள வேதாந்த மடத்திலும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் செல்லப்பா சுவாமி நினைவாலயத்திலும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.வேம்படி பிள்ளையார் ஆலயத்திலும் 31 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கொண்டலடி பிள்ளையார் ஆலயத்திலும் எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நீராவியடி கடையிற் சுவாமி ஆலயத்திலும் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 077 990 6867, 077 226 2572 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். இந்நிகழ்வில் சைவ அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 02 சபாபதி வீதி 96, 96/1 எனும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்களின் உரிமையாளர் வேலன் கதிரவேலர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு வீ.நவரத்தினராசா முகதாவில் 1956.01.16 ஆம் திகதி 4986 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய கடன் உறுதி மூலம் வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த வேலன் கதிரவேலுவும் இராமு தம்புவும் பெண் சின்னப் பிள்ளையும் அவ்வூர் கனகசபை கைம்பெண் சோதிப்பிள்ளைக்கும் கனகசபை மகள் மகாறோசினிக்கும் கடன் உறுதி மூலம் வழங்கியுள்ளனர்.

தொடர்ந்து இராமு தம்பு மகள் நீலாம்பிகை பிரசித்த நொத்தாரிசு கதிரவேலு சிவசுப்பிரமணியம் முகதாவில் 24.11.2003 ஆம் திகதி 2710ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதிமூலம் குறித்த ஆதனத்தை தனக்குரியது என வெளிப்படுத்தியுள்ளார். அவ்வுறுதியின் ஆதன இடாப்பின் விபரிக்கப்படும் ஆதனத்திற்கு எனது காலஞ்சென்ற பிதா, மாதா ஆகிய இராமு தம்புவும் பெண் சின்னப்பிள்ளையும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் 9147ஆம் இலக்க பிரிவிடல் வழக்கின் இறுதித் தீர்வையின் பிரகாரம் சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்றும் இவ்வாதனம் யாழ்ப்பாண மாவட்ட காணிப்பதிவகத்தில் டி 142/284 இல் பதியப்பட்டுள்ளது என்றும், எனது பெற்றோர்கள் குறித்த ஆதனத்தை 1956.01.16ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வீ.நவரத்தினராசா அத்தாட்சிப்படுத்திய 4986ஆம் இலக்க உறுதியால் ரூபா மூவாயிரத்திற்கும் வட்டிக்கும் ஈடாக கனகசபை கைம்பெண் சோதிப்பிள்ளைக்கும் மகள் மகாறோசினிக்கும் கட்டுப்படுத்தி பின்னர் குறித்த ஈட்டு முறியின் பேரால் செலுத்த வேண்டிய முதல் வட்டியைச் செலுத்தி குறித்த ஈட்டு முறை 1969ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் டி 244/200 இல் பதியப்பட்டுள்ளதென்றும் இப்புத்தகம் பதிவகத்தில் பழுதடைந்து விட்டதென்றும், எனது பெற்றோர்கள் குறித்த ஆதனத்தை எவருக்கும் மாறானதும் எவ்வித இடையூறுகளுமற்ற சுயாதீனமாக ஆண்டனுபவித்து எனது தாயார் இறக்க பிள்ளைகளான அப்புத்துரை பெண் நேசம்மா, பொன்னுத்துரை பெண் தங்கம்மா. சிங்கராசா பெண் கதிரமலர் ஆகியோரும் நானும் எங்கள் பிதாவாகிய இராமு தம்புவும் ஆண்டனுபவித்து வந்தோம் என்றும். எமது பிதா இராமு தம்பு எனது சகோதரிகளாகிய மேற்படி அப்புத்துரை பெண் நேசம்மாவுக்கும் பொன்னுத்துரை பெண் தங்கம்மாவிற்கும் சிங்கராசா பெண் கதிரமலருக்கும் வேறு ஆதனங்களை சீதனமாக கையளித்துள்ளார் என்றும் குறித்த எனது பிதா மரணித்து விட்டமையால் இதன்பின் விபரிக்கப்படும் ஆதனம் எனக்கே முழுமையாக வந்தடைந்ததென்றும் வெளிப்படுத்தியுள்ளார். ஆதனமாக வண்ணார்பண்ணை கிழக்கிறை "செம்மண் கிடங்கடி" நிலப்பரப்பு 3ம் குளி 1 38/50 வீடும் கிணறும் பயிர்வகைகளும் என வெளிப்படுத்தியுள்ளார்.

தம்பித்துரை பெண் நீலாம்பிகை தற்பொழுது (தம்பு மகள் நீலாம்பிகை) என்பவர் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 09.02.2009ஆம் திகதி 2467ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் குகனேந்திரராசன் பெண் தர்மினிக்கு தனது சீவிய நலவுரித்துக்கு அமைவாக அதே அளவு கொண்ட ஆதனத்தை சீதனமாக வழங்கியுள்ளார்.

அதன் பின்னர் கொக்குவில் கிழக்கு அம்பகர் வீதியைச் சேர்ந்த கணபதி குகனேந்திரராசாவும் பெண் தர்மினியும் பிரசித்த நொத்தாரிசு த.விக்கினராசா முகதாவில் 2018.11.10 ஆம் திகதி 2225 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கொக்குவில் சபாபதி ஒழுங்கை இல 96, 96/1 ஐ சேர்ந்த வல்லி தியாகராசாவிற்கும் பெண் சறோசாவிற்கும் அதே ஆதனத்தை அறுதியாக நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை யாழ்ப்பாணம் மாநகரசபை நாவாந்துறை கிழக்கு வட்டாரம் 23 (பழையது), நல்லூர் பிரதேச செயலர் பகுதி, J/100 வண்ணார்பண்ணை வடகிழக்கு கிராமசேவகர் பகுதி, வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 96, 96/1 "செம்மண் கிடங்கடி" பரப்பு நிலம் இலாச்சம் 3ம் குளி 1 38/50வீடும் கிணறும் வான்பயிர், செய்பயிர்களும்

இதற்கு எல்லைகள்
கிழக்கு - சின்னப்பொடியன் மாணிக்கத்துக்குரிய ஆதனம்,
வடக்கு - றோட்டு
மேற்கு - பொன்னன் தம்பையாவிற்கும் மனைவிக்கும் உரிய ஆதனம்
தெற்கு - கையொழுங்கை
இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை வல்லி தியாகராசாவும் பெண் சரோசாவும் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வல்லி தியாகராசாவும் பெண் சரோசாவும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

# மக்கள் மனங்களை ஆற்றுப்படுத்தும்

## 'ஹீலிங் ஸ்ரீ லங்கா' செயற்றிட்டம்

(கொழும்பு)

இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் தேசிய திட்டத்தின் ஒரு அங்கமாக, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் மனநலனை மேம்படுத்தும் நோக்கில் 'ஹீலிங் ஸ்ரீலங்கா' எனும் புதிய செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் அவர்கள், நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் உள்ள "சுஹ°ருபாய" வளாகத்தில் நடைபெற்ற பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் விசேட பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

நகரங்களும் கட்டிடங்களும் புனரமைக்கப்படுவது போல, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களின் "உடைந்த உள்ளங்களை" ஆற்றுப்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான இலக்காகும்.

இந் நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ், "வெறுமனே பௌதீகக் கட்டுமானங்களை மட்டும் சீரமைப்பது நாட்டை முழுமையாகக் கட்டியெழுப்புவதாக அமையாது. பாதிக்கப்பட்ட மக்களின் மனக்காயங்களை ஆற்றுப்படுத்துவதே நிலையான மீட்சிக்கு வழிவகுக்கும்" எனத் தெரிவித்தார். (நி)

# உலக சந்தையில் உச்சத்தை எட்டிய தங்கவிலை

(வோஷிங்டன்)

உலக சந்தையில் தங்கத்தின் விலை நேற்று உச்சத்தை எட்டியுள்ளது. அதன்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை முதன்முறையாக 4,400 அமெரிக்க டொலரைத் தாண்டி, தற்போது 4,500 அமெரிக்க டொலரை நெருங்கி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திடீர் விலை உயர்வுக்கு பல காரணங்கள் உள்ளதாக பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதன்படி, அடுத்த ஆண்டு அமெரிக்க பெடரல் ரிசர்வ் அதன் வட்டி விகிதங்களை மேலும் குறைக்கும் என்ற முதலீட்டாளர்களின் வலுவான நம்பிக்கை, உலகெங்கிலும் உள்ள பல்வேறு இராணுவ மற்றும் வர்த்தக மோதல்கள் காரணமாக பாதுகாப்பான முதலீடாக தங்கத்திற்கான தேவை அதிகரித்து வருவது மற்றும் உலக சந்தையில் அமெரிக்க டொலரின் மதிப்பில் ஏற்பட்ட சிறிய சரிவு, பிற நாணயங்களைப் பயன்படுத்தும் நாடுகள் தங்கத்தை வாங்குவதை ஒப்பீட்டளவில் எளிதாக்குதல் போன்றன திடீர் தங்க விலை உயர்வுக்கு காரணமாகும்.

உலக சந்தையில் தங்கத்தின் விலை வேகமாக அதிகரித்து வருவதால், இலங்கை தங்கச் சந்தையிலும் விலைகள் வேகமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# இலங்கையை வந்தடைந்த சீனத் தூதுக்குழு

(கொழும்பு)

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் உட்பட 11 பேரைக் கொண்ட சீனத் தூதுக்குழுவொன்று நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவைகளுக்கு சொந்தமான விமானம் மூலம் அந்தக் குழு நாட்டை வந்தடைந்துள்ளது.


அவர்களை வரவேற்பதற்காக இலங்கையிலுள்ள சீனத் தூதுவர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க ஆகியோர் விமான நிலையம் சென்று, வரவேற்பு அளித்துள்ளனர். (நி)


கண்ணீர் அஞ்சலி

தோற்றம் - 25.11.1945
மறைவு - 20.12.2025

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்
திரு.க.சயந்தன்
அவர்களின் அன்புத் தந்தையார்

திரு.
கனகசபை
கணபதிப்பிள்ளை




அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1833)

பிரிவில் துயர் கொள்ளும் கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 25.11.1945 மறைவு : 20.12.2025

எமது கல்லூரியின்
புவியியல் பாட ஆசிரியர்
திருமதி.ச.சுபாயினி
அவர்களின்
அன்பு மாமனார்

அமரர். கனகசபை
கணபதிப்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரமடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(6359)


ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பொதுமக்கள் மீது மோதியது கார் 9 பேர் படுகாயம்

### நெதர்லாந்தில் சம்பவம்




(நெதர்லாந்து)
நெதர்லாந்தில் பொது மக்கள் மீது கார் ஒன்று மோதியதில் 9 பேர் படு காயமடைந்துள்ளனர்.


நெதர்லாந்து நாட்டின் ஹெல்டர்லாந்து மாகாணம் நன்ஸ்பெட் பகுதியில் உள்ள வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கிறிஸ்துமஸ் கொண்டாட்ட அணிவகுப்பு நடைபெறவிருந்தது.

இந்த அணிவகுப்பை காண ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். அப்போது, வீதியில் வேகமாக வந்த கார் அங்கு கூடியிருந்த மக்கள் மீது மோதியது. இந்தச் சம்பவத்தில் 9 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற பொலிஸார், காயமடைந்த 9 பேரையும் மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அதே வேளை, காரை ஓட்டிய நன்ஸ்பெட் பகுதியைச் சேர்ந்த 56 வயது மூதாட்டி யிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் விபத்தா? பயங்கரவாத தாக்குதலா? என்பது குறித்து பொலிஸார் இது வரை எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை. (நி)





## சர்வதேச ...

### முற்றிலும் மீ...

### கண்...



வெனிசுலாவில் இருந்து சீனாவுக்கு கச்சா எண்ணெய் கொண்டு சென்ற கப்பலை அமெரிக்கா பறிமுதல் செய்துள்ளது.

இதற்கு சீனா கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது குறித்து சீன வெளியுறவுத் து... அமைச்சக செய்தித் தொடர்பாளர் லி... ஜியான் கூறியதாவது:

பிற நாடுகளின் கப்பல்களை... தன்னிச்சையாகப் பறிமுதல் செய்வத... மூலம், அமெரிக்கா சர்வதேச சட்... தைக் கடுமையாக மீறி யுள்ளது.

## உக்ரைனின் ஒடேசா மீது

### தாக்குதலை தீவிரப்படுத்தியது ரஷ்யா

(கீவ்)
தெற்கு உக்ரைன் பிராந்தியமான ஒடேசாவில் ரஷ்யா தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

இதனால் பரவலான மின்வெட்டு ஏற்பட்டு, பிராந்தியத்தின் கடல்சார் உட்கட்டமைப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் துணைப் பிரதமர் ஒலெக்ஸி குலேபா, மொஸ்கோ இப்பகுதியில் "திட்டமிட்டு" தாக்குதல்களை நடத்தி வருவதாகக் கூறினார்.

மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் நடத்துவது, உக்ரைனின் கடல்சார் தளவாடங்களுக்கான அணுகலைத் தடுக்கும் மொஸ்கோவின் முயற்சி என்று ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

டிசம்பர் மாத தொடக்கத்தில், கருங்கடலில் ரஷ்யாவின் நிழல் கடற்படை டேங்கர்கள் மீது ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கு பதிலடியாக உக்ரைனின் கடலுக்கான அணுகலைத் துண்டிப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அச்சுறுத்தினார்.

"நிழல் கடற்படை" என்பது 2022ஆம் ஆண்டு உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பிற்குப் பின்னர் விதிக்கப்பட்ட மேற்கத்தேய தடைகளைத் தவிர்க்க ரஷ்யாவால் பயன்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான டேங்கர்களைக் குறிக்கும் ஒரு சொல்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை தாக்குதல்கள் ஒடேசா வில் உள்ள துறைமுக உட்கட்டமைப்பைத் தாக்கி, ஒரு சிவிலியன் கப்பலை சேதப்படுத்தியதாக பிராந்திய ஆளுநர் தெரிவித்தார்.

இது நூற்றுக்கணக்கான தாக்குதல்களின் அண்மையது ஆகும்.

இது இப்பகுதியில் பல நாட்களாக மின்சார விநியோகத்தைச் சீர்குலைத்து பல உயிரிழப்புகளை ஏற்படுத்தியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்கள் 120,000 பேருக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன், ஒரு பெரிய துறைமுகத்தில் தீ விபத்துக்கும் வழிவகுத்தது. (நி)



## உக்ரைனை கை...

### ரஷ்யாவுக்...

### அமெரிக்கா...

(வோஷிங்டன்)
உக்ரைனைக் கைப்பற்றும் திறன் ரஷ்யாவுக்கு கிடையாது என அமெரிக்க உளவுத்துறை இயக்குநர் துளசி கப்பார்ட் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும் மற்றும் ரஷ்யாவுக்கும் இடையே கடந்த 2022 முதல் போர் நடைபெற்று வருகின்றது.

இதனை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தீவிரமாக முயன்று வருகின்றன.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கடும் எதிர்ப்பையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...சட்டங்களை ...றும் அமெரிக்கா!

## ...டனம் வெளியிட்ட சீனா

(பீஜிங்)

**"மற்ற நாடுகளின் கப்பல்களை தன்னிச்சையாகக் கைப்பற்றும் அமெரிக்காவின் நடைமுறை சர்வ தேச சட்டத்தை முற்றிலும் மீறும்" செயலாகும் என்று சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச சட்டத்தில் அடிப்படையற்ற அல்லது ஐ.நா. பாதுகாப்பு சபையின் அங்கீகாரம் இல்லாத அமெரிக்காவின் ஒரு தலைப் பட்ச சட்டவிரோதத் தடைகளுக்கு எதிராகவும், பிற நாடுகளின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிராகவும் சீனா நிற்கிறது.

வெனிசுலாவுக்கு மற்ற நாடுகளுடன் பரஸ்பர நன்மை பயக்கும் உறவை வளர்த்துக்கொள்ளும் உரிமை உண்டு.

தனது நியாயமான உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதில் வெனிசுலாவின் நிலைப்பாட்டிற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு உண்டு என்று நாங்கள் நம்புகிறோம். இவ்வாறு லின் ஜியான் கூறியுள்ளார். (நி)

## ...ப்பற்றும் திறன் ...து இல்லை

### ...திட்டவட்டம்

...மீறி ரஷ்யாவின் உக்ரைன் மீதான ...தாக்குதல் தொடர்ந்து வருகின்றது.

டோனெட்ஸ்க், லுஹான்ஸ்க், ...கெர்சன் மற்றும் ஐபோரிஜ்ஜியா ஆகிய நான்கு உக்ரைன் மாகா...ணங்களை கைப்பற்றி விட்டதாக ...ரஷ்யா அறிவித்துள்ளது.

அத்தோடு, உக்ரைனுக்கு ...உதவும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ...ரஷ்யா கடும் எச்சரிக்கையை ...விடுத்து வருகின்றது.

இதனிடையே, ஐரோப்பிய ...நாடுகள் மீது ரஷ்யா போர் தொடுக்க ...இருப்பதாக பிரபல செய்தி நிறு...வனத்தின் தகவலுக்கு அமெரிக்க ...உளவுத்துறை இயக்குநர் துளசி ...கப்பார்ட் பதிலளித்துள்ளார்.



உக்ரைனை கைப்பற்றும் திறன் ரஷ்யாவுக்கு கிடையாது, இப்படிப்பட்ட நிலையில் ஐரோப்பிய நாடுகள் மீது தாக்குதல் நடத்துவது என்பது சாத்தியமில்லாதது என அவர் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "இது முற்றிலும் பொய்யான பிரசாரம். ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போரை நிறுத்துவதற்கான ட்ரம்பின் அமைதி முயற்சியைச் சீர்குலைக்கும் செயலாகும். இலட்சக் கணக்கான மக்களின் உயிரைப் பறித்த இந்தப் போரை நிறுத்தும் ட்ரம்பின் முயற்சியை தடுக்கப் பார்க்கின்றார்கள்.

மக்களிடையே கோபம் மற்றும் அச்சத்தைத் தூண்டி போரை விரிவு படுத்த முயற்சி நடக்கின்றது.

ரஷ்யாவுடன் அமெரிக்க இராணுவத்தை நேரடியாகப் போரில் ஈடுபடுத்துவதற்காக நேட்டோவும் ஐரோப்பிய ஒன்றியமும் விரும்புகின்றன.

ஆனால், உண்மையில் நேட்டோவுடன் போரிடுவதை ரஷ்யா தவிர்த்து வருகின்றது. தற்போதைய சூழலில் உக்ரைனைக் கைப்பற்றும் திறன் ரஷ்யாவுக்கு கிடையாது" என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## கிறீன்லாந்து அமெரிக்காவுக்கு தேவை மீண்டும் புயலைக் கிளப்பிய ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்காக கிறீன்லாந்து எமக்குத் தேவை என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், "அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே" என்கிற கொள்கையில் பல அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார்.

குடியேற்றக் கட்டுப்பாடுகள், விசா கட்டணத்தில் மாற்றம் என அவற்றில் அடக்கம். இன்னொரு புறம் நாடுகளைக் கைப்பற்றுவது தொடர்பாகவும் அவ்வப்போது பேசி வருகிறார்.

அந்தவகையில் கடந்த காலங்களில் கனடா, பனாமா கால்வாய், கிறீன்லாந்து உள்ளிட்ட நாடுகள் அமெரிக்காவுக்கு வேண்டும் எனக் கோரிக்கை வைப்பதுடன் அதற்கான பணிகளிலும் தீவிரம் காட்டி வருகிறார்.

இந்த நிலையில், கிறீன்லாந்து பற்றிய விவகாரம் மீண்டும் விஸ்வரூபமெடுத்துள்ளது.

லூசியானா ஆளுநர் ஜெஃப் லாண்ட்ரியை கிறீன்லாந்திற்கான தனது சிறப்புத் தூதராக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நியமனம் செய்தார். அவர் நியமிக்கப்பட்ட ஒருநாளுக்குப் பிறகு பேசிய ட்ரம்ப், "கனிமங்களுக்காக அல்ல... அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்காக கிறீன்லாந்து நிச்சயம் தேவை. கிறீன்லாந்தின் எல்லா இடங்களிலும் ரஷ்ய மற்றும் சீனக் கப்பல்கள் உள்ளன. ஆகையால் கிறீன்லாந்தை நாம் பெற வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

டென்மார்க் இராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பரந்த, கனிம வளம் மிக்க கிறீன்லாந்து குறித்த ட்ரம்பின் பேச்சு மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சனும் கிறீன்லாந்து பிரதமர் ஜென்ஸ்-ஃபிரடெரிக் நீல்சனும் கூட்டாக அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளனர். அதில், "தேசிய எல்லைகளும் மாநிலங்களின் இறையாண்மையும் சர்வதேச சட்டத்தில் வேரூன்றியுள்ளன.

நீங்கள் மற்றொரு நாட்டை இணைக்க முடியாது. கிறீன்லாந்து, அந்த மக்களுக்குச் சொந்தமானது, அமெரிக்கா கிறீன்லாந்தை கையகப்படுத்தாது" எனத் தெரிவித்துள்ளது.

அட்லாண்டிக் பெருங்கடலுக்கும் ஆர்க்டிக் பெருங்கடலுக்கும் இடையிலுள்ள உலகின் மிகப்பெரிய தீவு தான் கிறீன்லாந்து. இந்தத் தீவின் 80 சதவிகிதப் பரப்பு பனிக்கட்டியால் போர்த்தப்பட்டிருக்கிறது.

இப்பகுதி அரிய கனிமங்கள் உள்ளிட்ட அபரிமிதமான இயற்கை வளங்களால் நிறைந்துள்ளது.

இது, சுமார் 57,000 மக்கள்தொகை கொண்ட ஒரு முன்னாள் டேனிஷ் காலனியாகும். 2009 ஒப்பந்தத்தின்கீழ் சுதந்திரம் அறிவிக்கும் உரிமையை இந்தத் தீவு கொண்டுள்ளது, ஆனால் மீன்பிடித்தல் மற்றும் டேனிஷ் மானியங்களையே பெரிதும் நம்பியுள்ளது. டென்மார்க் நாட்டின் கட்டுப்பாட்டின்கீழ், 1979 முதல், ஓரளவு தன்னாட்சி பெற்றதாக இருக்கும் கிறீன்லாந்தில் அமெரிக்காவின் பிடுஃபிக் விண்வெளி தளம் உள்ளது.

இதன் காரணமாகவே அமெரிக்க இராணுவத்திற்கும் அதன் பாலிஸ்டிக் ஏவுகணை எச்சரிக்கை அமைப்பிற்கும் கிறீன்லாந்து முக்கியமானதாக இருக் கிறது.

மேலும், ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் மிக எளிதாக இணைக்கும் பாலமாக இது இருக்கிறது.

மேலும், உலக நாடுகள் தங்களின் வர்த்தக வரம்பை ஆர்க்டிக் வட்டத்தில் விரிவுபடுத்த முயல்கின்றன. குறிப்பாக, ரஷ்யா இந்தப் பகுதியை ஒரு மூலோபாய சந்தர்ப்பமாகப் பார்க்கிறது. இதையடுத்தே, ட்ரம்ப் அதன்மீது பார்வையைச் செலுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் கொள்கை என்பதையே உலகம் முழுவதும் நிலைநாட்ட வைக்கும் வகையிலேயே ட்ரம்ப் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகர சபையை எதிர்க்கட்சிகள் பொறுப்பேற்கும்

## முஜிபுர் ரஹ்மான்



(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையின் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கூட்டு எதிர்க்கட்சியினர் உடனடியாக மாநகரசபையின் கட்டுப் பாட்டைத் தம்வசம் எடுத்துக் கொள்வார் கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

"கூட்டு எதிர்க்கட்சி மாநகரசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றும்போது, முதல்வர் ஒரு வெறும் பொம்மையா கவே மாறிவிடுவார்" என்று அவர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் ஆளும் தரப்பு தோல்வியடைந்துள் ளதால், சபையின் பெரும்பான்மை பலம் எதிர்க்கட்சியிடம் இருப்பதை இது உறு திப்படுத்துவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

"முதல்வரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாக அமையாமல், பகிரங்க வாக்கெடுப்பாக இருந்திருந்தால், ஆரம்பத்திலேயே எதிர்க்கட்சிகள் மாநகரசபையைக் கைப் பற்றியிருக்கும்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தி தலைமை யிலான கொழும்பு மாநகரசபையின் வரவு செலவுத்திட்டம், நேற்று எதிர்க்கட்சிகளின் கூட்டு முயற்சியால் 3 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக் கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சபையின் எதிர்கால நிர்வாகம் குறித்து கடும் அரசியல் விவாதங்கள் எழுந்துள் ளன. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1992- இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>6 இல் சூரிசெவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, நில அளவை உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/16379 | பிறப்பு-1992 - இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>2 இல் செவ்<br>கி.பா: 33 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BBM,முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, விவாகரத்தான வர்கள்<br>தொ.இ: G/16260 |
| பிறப்பு:1986- இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி-பா- 46<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்- BBM, Banker<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16380 | பிறப்பு-1993 - இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>12 இல் சூரிசெவ்<br>கிபா-41 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு - நிரந்தரவேலை<br>தொ.இ: G/16275 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்-A/L,Contract Work<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16382 | பிறப்பு: 1987-RC<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் -A/L, Care Taker<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16138 |
| பிறப்பு: 1989- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-Driver(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16383 | பிறப்பு: 1996 - இந்து<br>நட்சத்திரம்-மிருகசீரிடம்<br>கி-பா: 26<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC(IT), Work<br>எதிர்பார்ப்பு - Degree<br>தொ.இ: G/16357 |
| பிறப்பு: 1991- இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>5 இல் சூரிசெவ்<br>கி-பா: 13 1/4<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்: BSC,MSC, PHD, Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16384 | பிறப்பு -2002 - இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>8இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - BSC, MSC, Labwork (London)<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி<br>தொ.இ: G/16207 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 505



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நல்ல பண்புகள்

ஒரு நண்பர் வந்தார். "நல்ல பண்புகள் என்று சொல்கிறார்களே. அப்படி என்றால் என்ன சார்?" என்று கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது! "இது தெரியாமல் இவ்வளவு நாள் இருந்து விட்டாரே!" என்று நினைத்தேன்.

அதனாலே தான் அவர் நமக்கு நண்பராக வந்து சேர்ந்திருக்கிறார் என்று தோன்றியது! அதுக்கப்புறம் பேசிக்கொண்டிருந்தேன். அவரை உட்கார வைத்து எது எதெல்லாம் நல்ல பண்புகள் என்பதைப் பற்றி நபிகள் நாயகம் சொல்லி இருக்கிறார். அவர் நமக்கு சொல்லி இருக்கின்ற நற்பண்புகள் என்னென்ன தெரியுமா? ஒற்றுமையுடன் இருப்பது, நல்ல காரியங்கள் செய்வது, தர்மம் செய்வது, வணக்கம் சொல்ல முந்திக் கொள்வது, நோயாளிகளைச் சென்று காண்பது.

நல்லவரா? கெட்டவரா? என்று பாராமல் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்வது. முஸ்லீமா, முஸ்லீம் அல்லாதவரா என்று பாராமல் அயலாருடன் அன்புடன் நடந்து கொள்வது. முதியவர்களுக்கு மரியாதை செய்வது. மன்னிப்பது. சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது. கோபத்தை அடக்குவது விலக்கப்பட்டதைத் தவிர்ப்பது. உறவினர்களிடம் அன்பாய் நடந்து கொள்வது. கர்வம் கொள்ளாமல் இருப்பது.

இவை எல்லாம் நற்பண்புகள் என்று நபிகள் நாயகம் சொல்லி இருக்கிறார். இந்தப் பண்புகள் எல்லா மனிதர்களுக்கும் இருந்து விட்டால் நாம் கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லை!

ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை ஒரு பண்பாகவே வளர்த்துக்கொண்டோம் என்றால் அப்புறம் நீ வேறு நான் வேறு என்ற நினைப்பே வராது!

நல்ல காரியங்களையே செய்ய வேண்டும், தீய காரியங்களைச் செய்யக்கூடாது! தர்மம் செய்ய வேண்டும். அது ஒரு கடமை.

எதிரிலே ஒருவரைப் பார்க்கிறோம். அவர் சொல்வதற்கு முன்னால் நாம் முந்திக் கொண்டு அவருக்கு வணக்கம் சொல்ல வேண்டும். அது ஒரு சிறந்த பண்பு. ஒருவர் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார் என்று கேள்விப் பட்டால் உடனே அவரைப் போய்ப்பார்க்க வேண்டும். அது ஒரு பண்பு.

ஒரு பிரேத ஊர்வலம் போகிறது என்று வைத்துக்கொள்ளுங்களேன். செத்துப் போனவர் நல்லவரா, கெட்டவரா என்று எல்லாம் பார்த்துக் கொண்டிருக்காமல் அந்த ஊர்வலத்திலே கலந்து கொள்ள வேண்டும் அது தான் சிறந்த பண்பு.

அந்த ஆள் நமக்கு வேண்டாதவன். நாம் என்னத்துக்குப் போக வேண்டும்? என்று நினைக்கக்கூடாது!

முஸ்லீமா - முஸ்லீம் அல்லாதவரா என்று பார்க்காமல் அயலாரிடம் அன்பாக நடந்து கொள்வது ஒரு நற்பண்பு என்கிறார் நபிகள் நாயம்! வயசானவர்களை அலட்சியப்படுத்தாது அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் . அவரிடம் பணிவாக நடந்து கொள்ள வேண்டும், அவர்களை மதிக்க வேண்டும்.

மன்னிப்புஇருக்கு பாருங்கள். அது மிகவும் பெரிய விடயம். மனிதனுக்கு அந்தப் பண்பு அதிமுக்கியம். சண்டை, சச்சரவுகளைத் தீர்த்து வைக்கிறது ஒரு சிறந்த குணம். கோபப்படக்கூடாது. கோபத்தை அடக்க வேண்டும். வேண்டாத விடயங்களையெல்லாம் விட்டு விடவேண்டும். அதாவது விலக்கப்பட்டதையெல்லாம் தவிர்க்க வேண்டும்! சொந்தக்காரங்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். அது ஒரு சிறந்த பண்பு. எந்த நிலைமையிலும் கர்வம் கொள்ளக்கூடாது. இது எல்லாம் நற்பண்புகள் என்று சொல்லி நபிகள் நாயகம் அடையாளம் காட்டுகிறார்.

நாமெல்லாம் அதைப் புரிந்து நடந்துகொண்டால் இந்த உலகத்திலே நல்ல விதமாக வாழலாம். இப்போது உதாரணத்திற்கு சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைக்கிறது ஒரு நல்ல பண்பு என்று இப்போது பேசிக்கொண்டோம். ஆனால் இன்றைக்கு காலம் எப்படி இருக்கிறதுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்! ஒரு நடுத்தெருவிலே ஒரு அடிதடி சண்டை நடக்குது. சுத்தி ஏகப்பட்ட கூட்டம். அந்தக் கூட்டத்து நடுவிலேயிருந்து ஒரு ஆள் தப்பித்து வெளியிலே வந்தான். அவன் சட்டை துணி மணியெல்லாம் கிழிந்து தொங்குது. வசமாக அடி வாங்கியிருப்பான் போல இருக்கு.அவனைக் கூப்பிட்டு நான் அட்வைஸ் பண்ணினேன்.

"ஏம்பா இது மாதிரி சண்டை போடுகிறீர்கள்? சமாதானமாக போங்கள் அது தான் நல்லது!" என்றேன். "அட போய்யா நான் சண்டை போட்டவன் இல்லை. அதைத் தீர்த்து வைக்கப் போனவன். இப்படி ஆகிவிட்டேன்! என்று சொல்லிவிட்டு அங்கேயிருந்து வேகமாக நடந்து போகிறான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்ட செயலகத்தில் நடமாடும் சேவை



(வவுனியா)

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழான விசேட நடமாடும் சேவை வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், வவுனியா தெற்கு பிரதேச செயலகம் ஆகியன இணைந்து குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இந் நடமாடும் சேவையில் காணி அனுமதிப் பத்திரம் வழங்கிவைத்தல், காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு, மனித வள அபிவிருத்தி தொடர்பான சேவைகள், ஜனாதிபதி செயலகத்தின் பன்முகப்படுத்தப்பட்ட சேவைகள், ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவைகள், போதை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு உட்பட பொது மக்களுக்கான பல்வேறு சேவைகள் முன்னெடுக்கப்பட்டன. நிகழ்வில் முதன்மை அதிதி யாக கலந்து கொண்ட கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க உத்தியோகபூர்வமாக நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தார்.

குறித்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன், மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திர, மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன் உட்பட திணைக் களங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். (8-250)






கலாபூஷணம் கோகிலா மகேந்திரனின் பவளவிழா நிகழ்வுகள் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இராமநாதன் வீதி (ராஜா கிறீம் ஹவுஸ்) யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)



புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பாக பொதுமக்களைப் பாதுகாக்கும் பொதுசுகாதார வேலைத்திட்டங்களை இந்த வருடம் சிறப்பாக ஆற்றிய பொது சுகாதாரப் பரிசோதகர்கள் "நாட்டா" வினால் சின்னஞ்சூட்டி, சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டு மதிப்பளிக் கப்பட்டுள்ளனர்.

பொறலஸ்கமுவவிலுள்ள ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இலங்கையின் 25 மாவட்டங்களிலிருந்தும் மதிப்பளிப்புக்காக பொதுசுகாதார பரிசோதகர்கள் தேர்வு செய்யப்பட்டு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம் சுபேசன்)

## வலம்புரி; வாசகர்களுக்கு கிடைத்த அரும்பெரும் சொத்து

வலம்புரிப் பத்திரிகை 26 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து அடுத்த கால் நூற்றாண்டுக்குள் பிரவேசிப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். சகல வயதுக்காரர்களுக்கும் பொருத்தமான வகையிலேயே பத்திரிகையில் சகல அம்சங்களும் காணப்படுகின்றன.

ஆசிரிய தலையங்கங்கள் "நாட்டின் தலைவரான ஜனாதிபதி முடியுமானவரை நேர்மையாக செயற்பட முயற்சிக்கின்றார்" என்பதனைச் சிலாகிக்கும் வண்ணம் அமைவதை காண்கிறோம்.

யாழ்ப்பாண பொதுமக்கள் அனைத்தையும் எதிர்க்கும் மனோபாவத்துடன் நடந்துகொள்வது எமக்கே பாதகமாக முடியும் என்பதனை இடித்துரைக்கின்றார் ஆசிரியர்.

கலைஞர் கருணாநிதி அடிக்கடி கூறுவது போல "உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்கு கைகொடுப்போம்" என்பதனை வலியுறுத்துவது போல ஆசிரியர் தலையங்கம் அமைவது சிறப்பாகவுள்ளது.

முன்னைய ஆசிரியர் தலையங்கம் ஒன்றில், "ஜெனிவா மாநாட்டில் எல்லாத் தலைவர்களும் சென்று உரையாற்றுவது போல் செய்திகள் வரும், ஆனால் பின்னர் அறியும் போது, அவையெல்லாம் அருகிலுள்ள வேறொரு மண்டபத்திலேயே பேசப்பட்டன என அறியக்கூடியதாக உள்ளன. அப்பொழுதெல்லாம் நான் சிறுவயதில் எனது பாட்டியுடன் நல்லூர்த் திருவிழாவிற்குச் சென்று, அவர் வழிபாடாற்றி முடிக்கும் வரை நாவலர் மண்டப வாயிலில் இருந்து புதினம் பார்த்து விட்டு, என் நண்பர்களிடம் திருவிழா முழுமையையும் கண்டு கழித்தது போல பெருமையடித்துக் கொள்வது ஞாபகத்திற்கு வருவதுண்டு. அதை இப்பொழுது எண்ணிப் பார்க்கும் போது ஜெனிவாவிலும் ஒரு நாவலர் மண்டபம் உள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

வலம்புரி ஆசிரிய தலையங்கங்களைப் பார்க்கும் போது ஒரு காலத்தில் பத்திரிகைத்துறையின் ஜாம்பவான்களாக விளங்கிய கல்கி ஆசிரியர் கிருஷ்ண மூர்த்தி, ஆனந்த விகடனின் ஆரம்ப கால ஆசிரியர்கள் தேவன், மணியன், தாமரை மணாளன் போன்றோர் நினைவுக்கு வருகிறார்கள்.

வலம்புரி சங்கு பொதுவாக வெகு அரிதாக கிடைக்க கூடியது. அதுபோலவே வலம்புரிப் பத்திரிகையும் வாசகர்களுக்கு கிடைத்த அரும் பெரும் சொத்தாகும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

அறப்பணியாற்றும் ஆறு.திருமுருகன் அவர்களது பணிகளின் சிறப்புப் பற்றி செய்திகள் வருவது மனநிறைவைத் தருகின்றது.

**முருகேசு சண்முகம் J.P,**
**ஓய்வுநிலைத் தபாலதிபர்,**
**ஆனைக்கோட்டை.**

# இராசிபலன்

24.12.2025
மார்கழி 09 , புதன்கிழமை
சதுர்த்தி முற்பகல் 11.41 மணிவரை

அவிட்டம் முழுவதும்
சுபநேரம் 4.56- 6.26மணிவரை
இராகுகாலம் 12.26 - 1.56 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூரம்

**வளவன்**

**மேஷம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள்

**கடகம்** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், எண்ணியது நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தாய்வழி அனு கூலமுண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் க்காட்டுவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் செல்லும் நிலையுண்டு, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம்மாறுவர், தொழில்வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் , கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்** பக்குவமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** பணப்பற்றாக்குறை ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், மறக்கமுடியாத சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, சயன சுகக்குறைவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** நட்பு பகையாதிருக்க விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு

**கன்னி** பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்

**தனுசு** குடும்பத்தில் குதூ கலம் தரும் சம்ப வங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப காரிய பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**மீனம்** ஆடம்பர பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு

பேராசை முடிகிற இடத்தில் சந்தோசம் தொடங்குகிறது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 940





ஒருவேளை அது பாண்டிய நாட்டு மந்திரவாதிகளின் காரியமாயிருக்கலாம் நீங்கள் அதற்குப் பொறுப்பில்லை. ஆகையால் அருள்மொழியின் கதிக்கும் நீங்கள் பொறுப்பாளியில்லை. ஆனால் 'சக்கரவர்த்தியைக் கேட்டுச் சொல்ல வேண்டும்' என்று மட்டும் இனி என்னிடம் சொல்லாதீர்கள். அப்புறம் அந்த அன்பில் பிரம்மராயனைக் கேட்டுச் சொல்ல வேண்டும் என்று கூடச் சொல்வீர்கள். சக்கரவர்த்தியும் முதன்மந்திரியும் ஏதோ அந்தப் பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் விருப்பத்தை மீறி அவர்கள் எதுவும் செய்ய முடியாது. பழுவூர் பாட்டி நந்தினிதேவியைக் கேட்டுச் சொல்கிறேன் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்..!" இச்சமயம் கந்தமாறன் குறுக்கிட்டு, "ஐயா! எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருப்பவர்களை" என்று ஏதோ தடுமாற்றத்துடன் இரைந்து சொல்ல ஆரம்பித்தான்.

கரிகாலன் அவன் பக்கம் கண்களில் தீ எழ நோக்கி, முப்புரம் எரித்த சிவனைப் போலச் சிரித்து "கந்தமாறன்! இது உங்கள் வீடா? மறந்துவிட்டேன்! கொல்லி மலை வல்வில் ஓரியின் வம்சத்தில் பிறந்த வீராதி வீரன் நீ என்பதையும் மறந்து விட்டேன். உன் வீட்டில், அதுவும் நீ இருக்கும் இடத்தில் கொஞ்சம் பயந்துதான் பேச வேண்டும்! தவறாக என்ன சொல்லிவிட்டேன். உன் வீட்டு விருந்தாளிகளை என்ன செய்துவிட்டேன். கந்தமாறன்! ஏன் உன் கைகால் நடுங்குகிறது? ஈழத்தில் பரவியிருக்கும் நடுக்கு ஜுரம் உனக்கும் வந்து விட்டதா? நீ ஈழத்துக்குக் கூடப் போகவில்லையே!" என்றான். வந்தியத்தேவன் அப்போது, "கோமகனே! கந்தமாறனுக்கு நடுக்கு ஜுரம் இல்லை. தாங்கள் பழுவூர் இளைய ராணியைப் பாட்டி என்று சொன்னதில் அவனுக்குக் கோபம்!" என்றான்.

கந்தமாறன் வந்தியத்தேவனைக் குரோதத்துடன் பார்த்துக் கொண்டு கத்தியை எடுக்கத் தொடங்கினான். பார்த்திபேந்திரன் அவன் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்துக் காதோடு ஏதோ சொன்னான் கந்தமாறன் அடங்கினான். அவனுடைய உடல் மட்டும் சிறிது நேரம் நடுங்கிக் கொண்டிருந்தது.

கரிகாலன் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு, பழுவேட்டரையர் பக்கம் திரும்பி, "பாட்டா! இளங்காளைகள் இப்படித்தான் கட்டுக் கடங்காமல் சில சமயம் துள்ளிக் குதிப்பார்கள். அவர்களை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். நீங்கள் எனக்குப் பாட்டன் முறை ஆகையால் இளைய ராணி எனக்குப் பாட்டிதானே? அப்படி நான் அழைப்பதில் என் பாட்டிக்கும் வருத்தம் இல்லை தங்களுக்கும் வருத்தமில்லை. இந்தச் சிறு பிள்ளைகளுக்கு எதற்காக ஆத்திரம் பொத்துக் கொண்டு வருகிறது? போனால் போகட்டும்! நான் ஆரம்பித்த விடயத்தை விட்டுவிட்டு எங்கேயோ போய் விட்டேன். என் தந்தை சக்கரவர்த்தியின் பேரில் தாங்கள் பாரத்தைச் சுமத்த வேண்டாம். தாங்கள் சம்மதித்தால் என் தந்தையும் சம்மதித்தாற் போலத்தான். பொக்கிஷம் தங்கள் கையில் இருக்கிறது. வடபுலத்துக்குப் படையெடுத்துப் போகிறேன் என்றால், சோழ நாட்டிலிருந்து மூன்று இலட்சம் என்ன, முப்பது இலட்சம் வீரர்கள் போட்டியிட்டுக் கொண்டு வருவார்கள்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## கெட்டிக்காரன் புளுகு



ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்த படியால் உற்சாகமாய் சேவல் கூவியது. பலதடவை கூவியது.

இதைக் கேட்ட நரி அங்கே வந்தது. நரிக்கு சரியான பசி இருந்தது. அந்த சேவலை பிடித்து சாப்பிட ஆசைப் பட்டது, ஆனால் சேவல் மரத்தின் மீது இருந்த படியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப்பார்த்து,

"சகோதரனே!, வணக்கம். ஒரு நல்ல செய்தியை நீ கேள்விப் பட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. அன்பாய் நடந்து கொள்ள வேண்டும், சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றி பேசுவோம்" என்றது

நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கிப் பார்த்தது.

இதைக் கண்ட நரி, என்ன சகோதரா!, ரொம்ப அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது? என்று கேட்டது.

அதற்கு சேவல், அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது. வேட்டை நாய்கள் தானா என்பதைக் கவனிக்கிறேன்.

அவ்வளவு தான் நரிக்கு உடல் நடுங்கி விட்டது, வேக வேக மாக "சரி, சரி நான் பிறகு வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று கூறி கிளம்பியது.

சேவல், "அருமைச் சகோதரா, போகாதே, நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுது தானே நீ சொன்னாய், எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது"

நரி "அந்த ஒப்பந்தைத்தைப் பற்றி அநேகம்பேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள், அந்த நாய்களுக்கு தெரியாமல் இருந்தால், நான் என்ன கதி ஆவது? நான் போகிறேன்".

இதைச் சொல்லி விட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடிக் காட்டுக்குள் மறைந்தது.

சேவல் "யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய் உன்னுடைய கெட்டிக்காரப் பொய்கள் என்னிடம் பலிக்காது" என்று கூறி சிரித்தது.

கெட்டிக்காரன் புளுகினாலும் அது புத்திசாலியிடம் வெளிப்பட்டு விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்பவரே தன்னை முழுமையான சக்திசாலியாய் மாற்றி கொள்கிறார். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் தமிழ் அரசியலின் தகைமை கண்டீரோ

நம் தமிழ் இனத்தின் அரசியல் எப்படியாக இருக்கிறது என்பது பற்றித் தமிழ் மக்கள் இப்போது நன்கு அறிந்திருப்பார்கள்.

ஆன தலைவனும் வலுவான ஒற்றுமையும் இல்லாதபோது ஓர் இனத்தின் நிலைமை எப்படியாக இருக்கும் என்பதற்கு நாங்களே நல்ல உதாரணம்.

கடவுளே! எங்கள் தமிழினம் செய்த பாவத்தின் அறுவடை இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

எத்தனையோ அருமந்த இளைஞர்கள் செய்த தியாகம் கருகிப் போகிறது.

நல்லவர்களும் புத்திஜீவிகளும் மௌனித்துப் போயுள்ளனர். அவர்களின் மௌனம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

உண்மை. எதைக் கதைத்தாலும் அதற்கு விமர்சனம் - அதற்கு எதிர்ப்பு - அதற்கு வசை இதுவே எங்களின் எதிர்விளைவாக இருக்கும்போது, இருந்த இடம் தெரியாமல் இருந்து விட்டுப் போவதைத் தவிர அவர்களால் வேறு என்னதான் செய்ய முடியும்.

ஆம், விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தோம் எனப் போர் வெற்றி கொண்டாடிய மகிந்த ராஜபக்ஷ தரப்பை ஓட ஓடத் துரத்திய சிங்கள மக்கள் இந்த நாட்டை அநுர குமார திஸாநாயக்கவிடம் ஒப்படைத்தனரெனில், சிங்கள மக்களின் அரசியல் ஞானம் எத்துணை உயர்வானது - எத்துணை உறுதியான தென்பதை நாம் அவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் எங்களிடம் ஆன அரசியல் தலைமை உண்டா? என்றால் எதுவுமே இல்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை நம்பி மக்கள் வாக்களித்தனர். அனைத்து தமிழ் அரசியல் தரப்புகளையும் அவர்கள் ஒன்றிணைத்து எங்கள் தமிழினத்தை வழிப்படுத்துவார்கள் என நம் மக்கள் மலையாக நம்பினர்.

மக்கள் தமது நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில் தேர்தல்களின்போது அதை நிரூபித்தும் காட்டினர்.

என்ன செய்வது தமிழரசுக் கட்சி கர்வம் கொண்டதேயன்றி, தமிழினத்தின் விடிவு பற்றி இம்மியும் சிந்திக்கவில்லை. இதன் காரணமாக முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைக்கப்பட்டது.

பின்னாளில் தமிழரசுக் கட்சிக்குள் குழப்பம் ஏற்படலாயின. இப்போது அந்தக் கட்சியின் ஒற்றுமை எப்படியாக உள்ளதென்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

உண்மையில் தமிழரசுக் கட்சி தன்னளவில் ஒற்றுமையைப் பேணியிருந்தால் கூட நம் தமிழ் அரசியலுக்கு இப்படியொரு அவலம் ஏற்பட்டிருக்கமாட்டாது.

உண்மை. இப்போது எங்கள் தமிழ் அரசியல் என்பது கீழ்நிலைப்பட்டுவிட்டது.

இனி எங்கள் தமிழ் அரசியல் என்பது தெருச்சண்டைக்குரியது மட்டுமே. மற்றும்படி எங்களின் உரிமை தொடர்பில் எதுவும் நடக்கப்போவதில்லை. எவரும் கதைக்கப் போவதுமில்லை. இதுதான் நிதர்சனமான உண்மை.

# இந்தியா இலங்கையோடு என்றும் தோளோடு தோள் நிற்கும்

## அநுரவுக்கான விஷேட கடிதத்தில் பிரதமர் மோடி

(கொழும்பு)

இந்தியா இலங்கையோடு என்றும் தோளோடு தோள் நிற்கும் எனப் பாரதப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஊடாக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அனுப்பி வைத்த விஷேட கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அக்கடிதத்தில்,

டித்வா புயலுடன் திடீரெனத் தோன்றிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்ட பின்னர் இலங்கை அடுத்த கட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வரும் நிலையில் ஒரு நம்பகமான பங்காளியாகவும் உற்ற நண்பனாகவும் இந்தியா சாத்தியமான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கும்.

இலங்கை மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் மீள்திறனை உறுதி செய்வதிலும் கடந்த காலத்தைப் போலவே நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் நிற்போம்.

மேலும், இந்தியா எப்போதுமே இலங்கையின் பக்கம் நிற்பதை உங்களால் காண முடியும் என்றுள்ளது. (ம-7)

## வெற்றுச் சிலிண்டர்களை கொள்வனவு செய்ய விலைமனுக் கோரப்பட்டது

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயு கம்பனியால் 2025 - 2027 காலப்பகுதிக்காக வால்வு இல்லாத வெறுமை LPG சிலிண்டர் வகைகள் 04 இனைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை தரநிர்ணயக் கட்டளைகள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகத்தர்களிடமிருந்து சர்வதேசப் போட்டி விலைமனுக் கோரப்பட்டுள்ளது.

அதற்காக 04 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்ட நிலையியற் பெறுகைக் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் லிட்ரோ எரிவாயு கம்பனிக்கு கிலோகிராம் 2.3 சிலிண்டர் 120,000 உம், கிலோகிராம் 5.0 சிலிண்டர் 185,000 உம், கிலோகிராம் 12.5 சிலிண்டர் 450,000 உம், கிலோகிராம் 37.5 சிலிண்டர் 7,000 உம் விநியோகிப்பதற்கான பெறுகை கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Sahamitr Metal Pressure Containers Public Co.Ltd இற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ்

### யாழ். போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற அகிம்சை வழி அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட போராட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட ஐவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் மல்லாகம் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பொலிஸாரால் கடுமையாக நடத்தப்பட்டு வேலன் சுவாமிகள் ஏற்கனவே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இந்நிலையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## 531 கைத்தொழில்களுக்கு முதற்கட்ட நிதியுதவி

(கொழும்பு)

டித்வா புயல் மற்றும் சீரற்ற வானிலை காரணமாகப் பாதிக்கப்பட்டு செயலிழந்துள்ள கைத்தொழில்களை மீட்டெடுப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அரசாங்கத்தினால் வழங்கப்படும் 2 இலட்சம் ரூபா நிதியை முதற்கட்டமாக 531 கைத்தொழில் முயற்சிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் தலைமையீட்டில் அரசாங்கத்தினால் ஒரு முறை மட்டும் வழங்கப்படும் நிதியுதவியாக ஒரு அலகிற்கு 2 இலட்சம் ரூபா வீதம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தாய்லாந்திலிருந்து அஞ்சல் மூலம் ரூ. 6 கோடி பெறுமதியான போதைப்பொருள்

### சந்தேகத்தில் ஒருவர் கைது

(கொழும்பு)

தாய்லாந்திலிருந்து அஞ்சல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த சுமார் 06 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளை இலங்கைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தாய்லாந்திலிருந்து கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்றகத்துக்கு வந்திருந்த சந்தேகத்திற்குரிய பொதி ஒன்றைச் சுங்க அதிகாரிகள் சோதனையிட்டனர்.

இதன்போது, அந்தப் பொதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6 கிலோகிராம் எடையுடைய "குஷ்" ரக போதைப்பொருள் மீட்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட இந்தப் போதைப்பொருள் தொகையின் பெறுமதி சுமார் 6 கோடி ரூபாய் என இலங்கைச் சுங்கம் மதிப்பிட்டுள்ளது.

இதனிடையே இந்தப் பொதியை பெற்றுக் கொள்வதற்காக வந்திருந்த தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரையும் சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். (ம-7)

## உடுப்பிட்டியில் தீ விபத்து உடைமைகள் எரிந்து நாசம்

உடுப்பிட்டி - இமையாணன் மேற்கு நாவலடி பகுதியில் இடம்பெற்ற பாரிய தீ விபத்தில் குடும்பம் ஒன்றின் உடைமைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளன. நேற்று முன்தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் ஏற்பட்ட திடீர் மின்னொழுக்குக் காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீ விபத்தின் போது வீட்டில் இருந்த பெறுமதியான ஆடைகள், மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் என அனைத்தும் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளன.

தீ பரவியதைக் கண்ட அயலவர்கள் உடனடியாக ஒன்றுதிரண்டு கடும் போராட்டத்திற்கு மத்தியில் தீயை அணைத்துக் கட்டுப்படுத்தினர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான ஆளுமையில் ஆற்றல்மிகு பெண்களுக்கு முன்னுதாரணம்





பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

தற்பெருமையல்ல இது தற் துணிவின் தன்னம்பிக்கையின் தன்னடக்கத்தின் ஆளுமையைப் பற்றிய சிறப்பிது. பெண்ணாக அவதரித்து இப் பூமியில் புதுமை யுடன் புலமையுடன் புகழுடன் வாழ்ந்த வரலாற்றை இக் கரங்கள் எழுதியதன் எழுத வைத்ததன் கைமாறாக எம்மினிய உறவு களின் சிந்தனைக்காக பதிவிடு கின்றேன்.

உசன் என்னுமொரு அழகிய கிராமம். ஏ9 பாதையில் மிருசு விலைத் தாண்டினால் வரும் அதனது உள்ளகப்பாதை. இரயில் தண்டவாளத்தைக் கடந்து வயல் வெளியூடாக பயணித்தால் உசன் கிராமம் கண்ணில்படும்.

மணல் கலந்த மண் தென்னை, பலா, மா, எனப் பல் வகைத் தாவரங்களைக் கொண்டி ருக்கும் மனைகள் எந்தப் பிரச் சினைக்கும் பட்டினி போட்டிராத கிராமம்.

யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்ட வேல் வந்த வழியில் உசன்பதியில் நின்றுவிட்டதால் அங்கேயே முருகப்பெருமானுக்கு கோயில்கட்டி உசன் கந்தசுவாமி கோயில் பெருமைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திற்கு நிலம் வளம் அனைத்தும் ஈய்ந்து அங்கொரு பரமேசுவரன் கோயிலமைத்த சேர்.பொன் இராமநாதன் லேடி லீலாவதி இராமநாதன் அவர்களால் அமை க்கப்பட்ட பாடசாலைகளில் உசன் இராமநாதன் பாடசாலையும் பெயர்பெற்றது.

பல்லாண்டு காலமாக உசன் கிராமத்தில் வாழ்ந்து உசன் இராமநாதன் மத்திய மகாவித்தி யாலயத்தில் ஆசிரியராக பின்னா் அதிபரான அமரா் க.பேரம்பலம் அவர்களுக்கும் அந்தப் பாடசாலை யில் ஆசிரியையாக பணிபுரிந்த அமரா் தெய்வானைப்பிள்ளை அவர்களுக்கும் இறைவன் கொடு த்த வரமாக பெண்ணாக அவ தரித்து துஷ்யந்தி என்னும் நாம மிட்டு அந்த கிராமத்து மண் வாசனையில் வளர்ந்த வேளை யில் பிறப்புடனேயே கால்வாத நோயினால் அவதரித்து பன்னி ரண்டு அகவை வரை தந்தையார் தூக்கி வளர்த்து ஆளாக்கிய பெரு மையைப் பெற்ற பெண் பிள்ளை இவர்.

தந்தையும் மகளுமாக உசன் கிராமம் பற்றிய மலரினை வெளியிட்டு அதன் பெருமையை உலகறியச் செய்தமையையும் காணக்கிடைத்தது.

**ஆரம்ப இடைநிலை மற்றும் முதுநிலைக் கல்விகள்**

உசன் இராமநாதன் ம.ம வித்தி யாலயம், பின்னர் சாவகச்சேரி ம.ம.வித்தியாலயத்தில் கல்விகற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய பட்டதாரியாகி சிறப்பு தேர்வு பெற்றதால் அமரா் பேராசிரியர் துரைராஜா துணைவேந்தராயிருந்த போது கிளிநொச்சியில் 1990 களில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய பீடத்தில் 1991ஆம் ஆண்டு செய் முறைக் காட்டுனராக இணைந்து 1992 இல் விவசாய பொறியியலில் விரிவுரையா ளராக பணிக்கமர்ந்தார்.

போர் நிகழ்ந்த காலங்கள் அங்கு மிங்குமாக அலைந்த தருணங்கள். அரை குறையாக இரணைமடு விவசாய ஆராய்ச்சி திணைக் களத்தில் உள்ள இரு கட்டடங்களில் ஆரம்பித்த விவசாயபீடத்தினை கட்டியெழுப்பும் பணி அங்கிருந்த அனைவருக்கும் கொடுக்கப்பட்டி ருந்தது.

1990களில் செய்முறைக் காட்டு னராக இணைந்தாலும் 1992 இல் இக் கற்கைகளுக்கும் விரிவுரை யாளராக இணையும் வாய்ப்பு கிடை த்தது. பெற்றவர்களைப் பிற்காலங்க ளில் கவனிக்கும் பொறுப்பை இரு வரும் கொள்கையாக வரித்துக் கொண்டதால் அவர்களின் விருப் போடு வாழ்க்கையிலும் இணைந்து கொண்டோம்.

1998களில் பேராதனைப் பல் கலைக்கழக உயர்பட்டப்படிப்பு விவசாய நிறுவனத்தில் முதுமாணி பட்டத்தை நிறைவு செய்தார்.

**நீரில் நீர்ப்பாச்சலில் கலாநிதி பட்டம்**

கலாநிதி பட்டப்படிப்புக்கு தயா ரானபோது பல கற்கை அனுமதிகள் பலதேசத்து பல்கலைக்கழகங்களி லிருந்து புலமைப்பரிசில்களுடன் தேடி வந்தபோதும் தன்னை பெற்ற வர்களையும் தாம் பெற்றெடுத்த பிள்ளைகளின் படிப்பினையும் கருத் திற்கொண்டு அவற்றினை விடுத்து எமது நாட்டிலே எமது பல்கலைக் கழகத்திலேயே கலாநிதி பட்ட படிப்பிற்காக தேர்வுசெய்து எமது தேசத்திலுள்ள 9 நீரியலில் புல மையாளர்களை பரீட்சகர்களாக கொண்டு தமது கலாநிதி பட்டத்தை சிறப்புற நிறைவு செய்தார்.

குடும்ப சுமை, நாட்டில் நடை பெற்ற போர், தமது கற்கைப்பணி ஆய்வுப் பணி அனைத்தையும் சரிசமமாக எதிலும் தொய்வு ஏற்படா வண்ணம் பார்த்துக் கொண்டது அதிசயத்திலும் அதிசயம். கோண் டாவில், சுன்னாகம் பகுதிகளிலுள்ள வெட்டுக்கிணறுகளிலுள்ள நீரின் தரம் பற்றியும் அது மாறும் காரண ங்கள் பற்றியுமான ஆய்வினை முன்னெடுத்து வெற்றிகரமாக நிறைவுசெய்தார்.

**கல்வியில் சிறப்புத்தகைமை**

தனது கற்பித்தல் திறமையாலும் ஆய்வுப்புலமையாலும் சிறந்த ஆய்வுக்கட்டுரைகளைப் பிரசுரிக்கும் வல்லமை பெற்றாா். கோண்டாவில் சுன்னாகம் விவசாயக் கிணறுகளின் நீரின் தன்மையை ஆய்வு செய்து அவற்றை மக்களுக்குத் தெரி வித்தாா். நீரில் மாற்றங்கள் ஏற்ப டுவதனை உவர்நீராக மாறுவ தனை அதற்கான காரணங்களை கண்டுபிடித்து மக்களுக்கு அறி வூட்டினாா். தொடர்ச்சியான எனது கட்டுரைகளை வடிவமைப்பதற்கான உந்து சக்தி அவரிடமிருந்து வந்ததென்பது புதுமையே. சிறந்த திட்டமிடல் மூலம் குடும்பத்தின் தனது துறையின் பீடத்தின் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை கனகச்சிதமாக செய்து முடித்த திறமை அவரையே சாரும்.

**விவசாயம் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள்**

விவசாய பீடத்தில் மட்டுமல்ல பீடம் தாண்டிய பல செயற்பாடுகளில் தன்னைமுழுமையாக ஈடுபடுத்தி அனைவரின் அன்பையும் பெற்றுக் கொண்டவர். பீடத்தில் துறைத் தலைவருக்கான வெற்றிடம் எத்துறை சார்ந்து வந்த போதெல்லாம் அவருக்கான அழைப்பு வந்தபோது எதனையும் எதிர்பார்க்காது இணை ந்து சிறப்பாகப் பணிபுரிந்தவர்.

நுண் நீர்ப்பாசனத்தில் சிறப்பாக ஆய்வு செய்தபெருமை இவரை சாரும். பீடத்தின் பீடாதிபதியாகி பலசெயற்பாடுகளை துணிவுடன் முன்னெடுத்த பெருமைக்குரிய வரும் இவராவர். பல்துறை விடயங்களில் தனது ஆளுமையை பதித்து அமைதியாக ஆர்ப்பரிக்காது அனைத்து விடயங்களையும் செப் பனிட்டு செய்து முடிக்கும் திறனுக்கு சொந்தக்காரராவர்.

**பாலின சமஅந்தஸ்து மற்றும் சமனிலை**

குடும்ப பொறுப்பையும் சுமந்து கொண்டு தாய்தந்தையரையும் பராமரித்துக் கொண்டு தன் வளர் ச்சியிலும் மிகவும் அவதானமாக முன்னேறி பேராசிரியராக முன் வந்தமை போற்றுதற்குரியது. தொழில்புரியுமிடத்தில் பாலின சமஅந்தஸ்து (Gender equity) மற்றும் பாலின சமனிலை (Gender equality) என்பதனை பேணக்கூடிய பெண்களுள் ஒரு வராக தன்னையும் சரிசமமாக உயர்வடையச்செய்து கல்வியிலும் ஆராய்ச்சியிலும் நிர்வாகத் திற னிலும் சிறந்து விளங்கியவர்களுள் ஒருவராக இவர் காணப்பட்டமை சிறப்புக்குரியது.

**குடும்பத்தை முன்னேற்றுவ தில் சிறந்த நிர்வாகி**

தனது மூன்று பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அவர்களின் சிறப்பு பெறுபேற்றில் மிகவும் அக் கறை கொண்டவராக இருந்த தனை அருகிருந்து கண்டமையி னால் இவ்வாறு எழுதமுடிந்தது. பிள்ளைகளின் கல்விப்பெறு பேற்றின் சிறப்பான அடைவு நிலையை கண்ணுற்று புளகாகித மடைந்த பாசமிகு ஆத்மா இவரென்றால் மிகையாகாது. குடும்பம் சிறக்க தனதும் தனது கணவனினதும் சிறப்பான பெறு பேற்றிற்கு ஊக்கமளித்து அதற் கான அடித்தளம் இட்டதும் இவ ராகும். தனது பிள்ளைகளின் திருமண நிகழ்வுகளை நோயின் வலியிலும் நெறிப்படுத்தி அவர்கள் சிறப்புற பணிபுரியும் பாங்கையும் கண்டு மகிழ்ந்ததை என்ன வென்பது. சமூகத்தை அனுசரித்து அர வணைத்து அனைவரையும் சமமாக நடாத்திடும் பாங்கும் என்றென்றும் சிரித்த முகத்து டனேயே நண்பர்கள் மாணவர் கள் ஊழியர்கள் என பலருடனும் பழகும் பண்பும் இவரிடம் இயற் கையாகவே இருந்தது.

சிறந்த நல்லாசானாக மிளிர்ந்ததை இவரிடம் கல்விகற்ற மாணவர்கள் அறிவர். ஆசிரியத் துவத்தை ஒரு அன்னையின் அரவணைப்புடனேயே மேற் கொண்டதனை அன்புக்கினிய மாணவர்கள் சொல்லிக் கேட்டு மகிழ்ந்த காலங்களுமுண்டு.

**புற்றுநோயின் வலியில் துவண்டு உருக்குலைந்தமை**

தனது 55 ஆவது வயதில் இருந்து கடந்த 5 வருடங்களாக கருப்பறை புற்றுநோயின் தாக்கத் தால் தன்னை உருக்கிக் கொண்ட ஆத்மா தனக்கிருந்த வலிகள் அனைத்தையும் தன்னகத்தே வைத்திருந்து இறுதியில் அதன் கொடிய நிலையில் தன்னை இறைவனின் பாதங்களில் சேர்த்துவிட்டாா். அவரின் பொறு மைக்கும் அமைதிக்கும் ஆற்ற லுக்கும் ஆளு மைக்கும் நிகர் அவரே. அன் னாரின் ஆத்மா வலியிலிருந்து விடுபட்டு அமை தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டில் தொலைக்...

நிமலதாஸ் (வயது - 41) என்பவரே உயிரிழந்தவராவார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## ரயில் மோதி...

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி பகுதியைச் சேர்ந்த இரத்தினராசா கிருஷ்ணமோகன் (வயது-52) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் பளைப் பகுதியில் இடம்பெறுகின்ற வீதி அபிவிருத்தியில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு உணவு எடுத்துக் கொண்டு பளை இத்தாவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை, காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த யாழ்தேவி ரயிலுடன் மோதி குறித்த விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இவ்விபத்து இடம்பெற்ற வேளை ரயில் வீதி காவலாளி இப்பகுதியில் காணப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,30,33,104,316)

## 12 வயதுச்...

துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் குகனேசன் டினோஜா என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுமி மாட்டிறைச்சி உட்கொண்டதன் பின்னர் உடலில் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. உடனடியாக தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் .

வைத்தியசாலையில் சிறுமிக்கு ஊசி ஒன்று செலுத்தப்பட்ட பின்னர் மயங்கி சிறுமி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-7,299)

## சண்டிலிப்பாய்...

வில்லை என்று கூறி கூட்ட மண்டபத்திற்கு வெளியே சில உறுப்பினர்கள் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கூட்டமானது பரபரப்புக்கு மத்தியில் ஆரம்பமானது.

இதேவேளை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஜெசீதனுக்கு மண்டபத்தின் முன்பக்கத்தில் வலது புறமாக ஆசனம் ஒதுக்கப்பட்டது.

இதன்போது குறித்த ஆசனத்தில் அமர்வதால் தன்னால் கூட்டத்தை தலைமை தாங்குபவரது முகத்தை சரியாக பார்க்க முடியாது உள்ளதாகவும், ஆசனத்தை மாற்றுமாறும் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது மேடையில், பிரதேச செயலருக்கு அருகாமையில் ஆசனம் வழங்கப்பட்டது. இந்நிலையில் அந்த இடத்தில் அமர வைக்க முடியாது என்றும், மேடைக்கு முன்பாக ஆசனம் ஒதுக்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார். இதன்போது அங்கே குழப்பநிலை ஏற்பட்டது.

பின்னர் தவிசாளருக்கு மேடைக்கு முன்பாக ஆசனம் வழங்கப்பட்ட நிலையில் கூட்டம் நடைபெற்றது. (ம-7,33,104)

## 17 வயதுச்...

யாழ்ப்பாண நகரில் பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப்பு சோதனையின் போது 17 வயதான சிறுவன் ஒருவன் உள்ளிட்ட பத்து பேர் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸார் நேற்றுக் காலை நடத்திய சுற்றிவளைப்பில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஐஸ் போதைப் பொருளுடன் நான்கு பேரும் போதை மாத்திரைகளுடன் ஐந்து பேரும் கேரள கஞ்சாவுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## 13 ஆயிரத்து...

எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் சிறப்புத் தூதராக நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நேற்றுக் காலை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்தார்.

அப்போது இந்தச் சிறப்பு உதவி பற்றிய திட்டம் குறித்த விபரங்களை இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் தெரிவித்தார்.

இந்த 450 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகுப்பில் 350 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகைக் கடன் வசதிகளைக் கொண்டது. மிகுதி 100 மில்லியன் அமெரிக்க டொலரும் மானியங்களாக வழங்கப்படும்.

இந்தத் தொகுப்பு இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமான ஆலோசனைகளின் பின்னர் இறுதி செய்யப்படுகின்றது என்று தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவி வழங்க இந்தியா முன்னுரிமை கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த புனரமைப்புப் பொதியானது சூறாவளியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சேதமடைந்த வீதிகள், தொடருந்து பாதைகள், பாலங்களை மீளமைத்தல் மற்றும் பழைய நிலைக்குக் கொண்டு வருதல்.

முழுமையாக அழிக்கப்பட்ட மற்றும் சேதமடைந்த வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புதல். சுகாதாரம் மற்றும் கல்வித்துறை சார்ந்த கட்டடங்கள் மற்றும் வசதிகளைப் புனரமைத்தல். பாதிக்கப்பட்ட விவசாயத் துறையை மீண்டும் கட்டியெழுப்புதல். எதிர்கால அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வகையில் சிறந்த பேரிடர் மேலாண்மை மற்றும் தயார்நிலைத் திட்டங்களை உருவாக்குதல் போன்றவற்றை உள்ளடக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நாட்டிலிருந்து...

இலங்கையை வந்தடைந்தார்.

குறித்த விஜயத்தின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவையும் சந்தித்து கலந்துரையாடியதுடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட கடிதத்தையும் அவர் ஜனாதிபதியிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 6052
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 9 0 2 5 0 7
அத சம்பத
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 2 5 0 7
சீட்டிழுப்பு இலக்கம் 0627
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 168
வெற்றி இலக்கங்கள் தனுசு 02 08 14
7820

தன நிதானய
திகதி - 2025.12.23
சீட்டிழுப்பு இலக்கம் - 2082
J 11 39 45 57 J
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance

மெகா பவர்
திகதி 23/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2400
N 05 33 53 67 75

ஜய
திகதி 2025.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 0320
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
C 3 1 0 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4294
சீட்டிழுப்பு திகதி 23.12.2025
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 04 22 74 79
N
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 1361
வெற்றி இலக்கங்கள்
இடபம் 17 40 45 49 இடபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.12.2025 வெற்றி வாரம் 0760
ஆங்கில எழுத்து F மற்றும் வெற்றி இலக்கம் 8 5 6 2 2 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,148,778.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3026
சீட்டிழுப்பு திகதி 2025.12.23 தினம் செவ்வாய்க்கிழமை
09 11 41 75 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,711,241.60
DLB

சனிதா
திகதி 23.12.2025 வெற்றி வாரம் 5187
வெற்றி இலக்கங்கள் 09 17 33 68 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,615,153.60
ரூ. 50,000/-
DLB

சசிரி
856
23.12.2025
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 13 37
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4738
சீட்டிழுப்பு திகதி 23.12.2025 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 35 44 62 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,548,286.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 16 03 05 18 34
சுப்பர் இலக்கம்
2202
23.12.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.615,067,730.40
DLB

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2852
சீட்டிழுப்பு திகதி : 2025.12.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,233,400.80
ADAKOTIPATHI
வெற்றி இலக்கங்கள் 11 12 37 67 I
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவு இயந்திர சாரதி தேவை

- அனுமதிப்பத்திரம் வைத்துள்ள உழவு இயந்திர சாரதி தேவை.
- பகுதி நேரமாகவும் வேலை செய்யலாம்.
- யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 075 719 0110

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4656)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## 22 உடன் விற்பனைக்கு 22

- யாழ். பிறவுண் வீதியில் 1 பரப்பு, 1 ½ பரப்பு, 2 பரப்புக் காணிகள் 3உம்
- யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்பு, 2 ½ பரப்பு,1 ½ பரப்பு, 3 பரப்புக் காணித் துண்டுகளும்
- யாழ். மனோகரா தியேட்டருக்கு அருகில் 2 ½ பரப்பில் அமைந்த வடக்கு வாசல் வீடும்
- யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் 6 பரப்புக் காணியும்
- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அருகில் 16 பரப்பு, 18 பரப்பு, 12 பரப்புக் காணியும்
- யாழ். ஸ்ரான்லி வீதியில் 4 கடைகளும்
- யாழ். சிக்னல் சந்திக்கு அண்மையில் தபாற்கந்தோர் வீதியில் தனிக்கடையும் உடன் விற்பனைக்குண்டு.

(C-4653)

தொடர்புகளுக்கு: 0777 232 535

## பணியாளர் தேவை விற்பனைக்குண்டு

சாவகச்சேரியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு றொட்டி வேலையில் அனுபவம் உள்ள பணியாளர் தேவை. அத்துடன் பாவித்த நல்ல நிலையில் உள்ள இரண்டு அவின்களும் விற்பனைக்குண்டு. (1836)

தொடர்புகளுக்கு: 077 649 1027

## Voyzant இந்தியா கோவில்கள்

ஆறுபடை வீடு, திருப்பதி, திருநாகேஸ்வரம், இராமேஸ்வரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், வைத்தீஸ்வரன், மேல்மருவத்தூர், திருவண்ணாமலை, மதுரை மீனாட்சி, திருவெண்ணெய்நல்லூர், சங்கரபாணி, திருவானைக்கா, காஞ்சிகாமாட்சி, ராமர்கோவில், திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்

189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு) (6308)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்

10 நாட்கள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd

புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)

077 284 9535, 021 222 6866

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

## பணிப்பெண் தேவை

தென் புலோலியில் தனிமையில் ஆரோக்கியமாக வசித்து வரும் வயோதிபப் பெண்ணுக்கு துணையாக தங்கியிருந்து பணி செய்ய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். (1835)

தொடர்புகளுக்கு: 0777 178 486

## வேலையாட்கள் தேவை

இந்திய உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- றொட்டி வேலை செய்பவர் (தங்கி நின்று வேலை செய்பவர் மட்டும்)
- சிற்றுண்டி தயாரிப்பவர். (ஆண் / பெண்)

(6368)

தொடர்புகளுக்கு: 070 664 7466, 077469 6695


## விற்பனைக்கு

ஓடுகள், தீராந்திகள், கட்டிட இடிபாடுகளுடன் கூடிய கட்டடம் விற்பனைக்குண்டு. (C-4652)

0777 232 535

## மரண அறிவித்தல்

### இரத்தினராசா கிருஷ்ணமோகன்



பிறப்பு 11.09.1973 — இறப்பு 23.12.2025

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு, கேணியடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 375/3, முத்துத்தம்பி லேன், நாவலர்றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராசா கிருஷ்ணமோகன் அவர்கள் நேற்று (23.12.2025) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர் (C-4658)

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 08 - 1935



இறப்பு 23 - 12 - 2025

### சீமாம்பிள்ளை அந்தோனிமுத்து

(ஓய்வு பெற்ற விரிவுரையாளர், அட்டாளைச்சேனை & கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்)

தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிமாம்பிள்ளை அந்தோனிமுத்து அவர்கள் நேற்று (23.12.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீமாம்பிள்ளை - மேரிஜோசப் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற லூர்துமேரி அவர்களின் அன்புக் கணவரும் மரியம்மா (மலர் - லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரரும் மோசஸ் தேவரட்ணம் (ஆசிரியர் - யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), எட்விஸ் சாந்தினி (லண்டன்), பிலிப்ஸ் விஜயரட்ணம் (பிரதிப் பதிவாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யூட் இயேசுநேசன், மேரி மாகிறேட் மெர்லின் (லண்டன்) ஆகியோரின் தாய்மாமனும் கிருபைராஜா (லண்டன்), மொறினா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிருபாளினி (லண்டன்), பெஸ்மன் (லண்டன்), கிபிர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் லூக்கா (லண்டன்) அவரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2025) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் தும்பளை புனித மரியாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பருத்தித்துறை கத்தோலிக்க சேமக்காலையில் (கோரியடி) நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அ.மோசஸ் - 077 190 7146

[illegible] 0546

தகவல்: குடும்பத்தினர் (C-4659)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | Max 2Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= | Max 5 Kg |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 230/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 199/= | Max 5Kg |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 250/= | Max 5 Kg |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 03 |
| 1Kg கடலை | - 349/= | |
| 1Kg செத்தல் NO 1 | - 850/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 210/= | |
| 1Kg குத்தரிசி | - 255/= | |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும். (1837)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org